Regd: No M. 5277. UDUMALAI BEERANGI. டெலிபோன் 2597.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை R. இரங்கநாதன்

வெடி 1.] 8-பக்கங்கள் சென்னை, சனிக்கிழமை (5-2-1949) விலை 1 அணு [குண்டு 18

உழைப்பவர் உள்ளம்

(புதுவை எ. நந்தகோபால்)

வானைமுட்டும் கூடகோபுரங்கள், வண்ணமா மாளிகைகள், வற்ருத வாவிகள், பச்சைப்பசேலென காட்சியளிக்கும் பயிர்வளங்கள், பஞ்சாலைகள், இன்னும் பிற இயற்கை வளங்களோடு பொருந்திய செயற்கை வளங்கள் அத்தனையும் பாட்டாளியின் கண்முன் காட்சியளிக்கின்றன.

பாட்டாளி அதைக் கண்டு ஆயாசத்தோடு பெருமூச்சுவிடுகிருன். அவனது மனம் பதை பதைக்கிறது, கூடகோபுரங்கள் கட்டித் தந்த நான் குடிசையிலே வாழுவதா, கூடகோபுரங்களிலே கற்சிலைகள் கொலுவீற்றிருப்பதா, மாடமாளிகைகள் கட்டித் தந்த நான் மண் குடிசையிலே மனைவி கூழுக்கு உப்பில்லை என்கிறபோது மனம் புழுங்கி சாவதா, மாடமாளிகைகளிலே மங்கையரோடு மஞ்சத்திலே மது வருந்தி கொஞ்சி குலாவுவதா பணாயகர்கள்.

காடுவெட்டி நிலந்திருத்தி கழனியாக்கி, நீர்ப்பாய்ச்சி, கலப்பை கொண்டாழ உழுது, காட்டெருவு போட்டு விதை விதைத்து நாற்று ஆனவுடனே நடவுநட்டு காவல் காத்து கதிர்முற்றியவுடனே அறுத்து களம் சேர்த்து கட்டடித்து அம்பாரம் குவித்து அதை நிலச்சுவான்தாரரின் வீட்டிலே ஒப்படைத்து பின்பு அவரால் அளிக்கப்படும் சில கல நெல்களை வைத்துக் கொண்டு சிந்தையிலே வறுமை கொண்டு சீரற்ற வாழ்விலே நான் ஜீவிப்பதா.

பஞ்சாலையிலே பஞ்சுகண்களிலே வந்து அடைய பஞ்சடைந்த கண்களோடு பாட்டுபட்டும் பாட்டுக்குத் தக்க கூலி கிடைக்காததால் பஞ்சத்திலே அடிபட்டு கட்ட கந்தையன்றி கதியின்றி காற்று மழை பெய்கிறபோது கடுங்குளிர் தாளாது நானும் எனது மனைவி மக்களும் நையிரண்டையும் விரித்து எங்கள் மெய்யினைப் போர்த்து கவலையுடன் காலத்தைக் கடத்துவதா என்ற எண்ணங்களால் பாட்டாளியின் நெஞ்சம் தாக்கப்பட்டு எரிமலை போல ஆவேசத்துடன் குமுறுகின்ற நேரத்திலே வீதியிலே "விதியிதுவாம் மாருதாம் மகனே", என்று பாடிசெல்லும் பிச்சைக்கார வேதாந்தியின் பாடல் வீறுகொண்ட அவனது நெஞ்சத்தை வீழ்த்தி விடுவதல்லாமல் ஆம் நமது தலைவிதியின்படி தானே நடக்கும் அரிச்சந்திரன், தருமன் நளன் போன்ற அரசர்களெல்லாம் தன் நாடு நகரங்களையிழந்து காடு சென்று பல வித தொல்லைகள் படவில்லையா அந்த விதியினுல் என் ஆண்டவனேகூட அந்த விதிக்கு தப்பமுடியாமல் படாத பாடுகள் பட்டிருப்பதாக புராண இதிகாசங்கள் கூறுகின்றபோது அற்ப

இதுவென்ன இழிதொழிலா?

ஆமா......ராஜா......ஆமா......கினதோம்......கினதோம்......ததி கினதோம்...ததி கினதோம்
ததிங்கினதோம்...தளாங்கு......தளாங்கு ......ததி கினதோம்......தகர்தினதோம்; பேஷ்! பேஷ்!!

அறிவு படைத்த நாம்மட்டும் அதனின்றும் எவ்வாறு தப்புவிக்க முடியும்? அதையறியாமல் ஆயாசப்படுவதால் ஆவது என்ன? ஆனந்தவாழ்க்கையிலே உண்டு களித்து ஆணவத்தோடு முதலாளிகள் வாழுகிருர்கள் என்ருல் அவர்கள் முன் பிறவியிலே செய்த புண்ணியத்தால் பூஜா பலனுல் இப்பிறவியிலே ஏகபோக உரிமையோடு வாழுகிருர்கள். நாம் முன் பிறவியிலே என்ன தீவினை செய்தோமோ அதை இப்பிறவியிலே அனுபவிக்கிறேும் என்று எண்ணவும் வைத்துவிடுகிறது. ஆரியம் முந்நாளில் மக்களை சுறண்டுவதற்காக தமக்கு அரணுக அமைத்துக்கொண்ட விதியென்ற அந்த இருளெழுத்துக்கள் அறிவினின்றும் மக்களைப் பிரித்து அறியாமையென்ற குழியை வெட்டி அதனிலே மக்களை தள்ளுவதற்காக ஆரியம் தமக்கு மண்வெட்டியாக உபயோகித்துக்கொண்ட விதியென்ற அந்த இரு எழுத்துக்கள் ஆரியத்திற்கு மட்டுமல்ல கொள்ளை லாபமடிக்கும் முதலாளி வர்க்கத்தின் சுறண்டலுக்கும் அரணுக அமைகிறது. ஆனுல் கொல்லையிலே உழக்கூடிய விவசாயிகளின் முன்னேற்றத்திற்கோ கொல்லன் போன்ற மற்ற இதர தொழிலாளிகளின் முன்னேற்றத்திற்கோ அரணமைக்கத் தவறுவதல்லாமல் அதனைக் கொல்லக்கூடிய நச்சுத்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. மறுமலர்ச்சி இயக்கம் பரவிக்கொண்டுவருகிற இந்த நாளிலேகூட உழைப்பவர்களின் வீட்டிலே போய்ப் பார்ப்போமானுல் உழைத்து எலும்புந்தோலுமாக இருக்கக்கூடிய அந்த மக்கள் பாடுபட்டும் என் தலைவிதி இப்படி பட்டினிகிடந்து வதையவேண்டியிருக்கிறது என்று சொல்வார்களே தவிர "சுரண்டுகிற ஒரு கூட்டத்தால் நான் சோகத்தி

2-ம் பக்கம் பார்க்க

நம்பினேன் உன்னை நடிகை ரம்பா!

—— கமலநாதன் ——

கருமையான தன் முகத்திற்கு 'குட்டி கூரா' வைப் போட்டு அப்பிக்கொண்டிருந்தாள் நடிகை ரம்பா! ஓரளவிற்கு காக்கையின் கழுத்து நிறமாகியது அவள் முகம். கருத்து தடித்திருந்த உதடுகளுக்கு 'லிப்ஸ்டிக்' தடவி சிவப்பாக்கினாள். லேசாக ஒரு சிரிப்பு சிரித்தாள், கண்ணாடியின் முன்னால். புருவத்தை 'சேவிங்' செய்திருந்ததால் கருப்பு மை கொண்டு செயற்கை புருவம் தீட்டவேண்டியதாகியது. மீண்டும் ஒரு சிரிப்பு. கருத்து முன்னால் கத்தையாக தொங்கிக்கொண்டிருந்த தலைமயிரை சுருட்டி நெற்றியில் தொங்கவிட்டாள். காது ஓரங்களில் மயிரை வளைத்து விட்டாள். மீண்டும் ஒரு எக்காளச்சிரிப்பு. அந்தச் சிரிப்பிலே கர்வம், ஏளனம் ஏமாற்றம் எல்லாம் கலந்திருந்தது. அவள் வாய் லேசாக முணுமுணுத்தது.

உம், பெரிய சீர்திருத்த வாதியாம் லட்சிய வாதியாம். நடிகைகளின் வாழ்வை வளமாக்கப் போகிறானாம். பைத்தியக்காரன் நடிகைகளை வீட்டில் பூச்சிகளாக ஆக்கப் பார்க்கிறான். கூண்டுக் கிளிகளாக்க முயலுகிறான். ஆண்கள் கூட்டத்துக்கு அடிமைகளாக்க விரும்புகிறான். உம்...அனுபவமற்ற இளம் காளை. அவன் ஒரு அப்பாவி. நடிகைகளிடம் பழகப்படாதவன். இல்லையென்றால் இவ்வளவு நாட்களாக என் சாகசங்கள் தெரிந்துக் கொள்ளாமல் இருப்பானா! அவனை என் கைக்குள் போட முயற்சி செய்தும் முடியவில்லையே. ஆனால் தளராத நெஞ்சுடையவன்தான். ஆனால் எப்படியாவது அவனை நம் கைக்குள் போட்டுக் கொள்ளத்தான் வேண்டும். அவன் பத்திரிகாசிரியன். அவனால் நமது லீலைகள் மறைந்து விடும். ம்...இன்று வரட்டும். எப்படியாவது அவனை படிய வைக்கிறேன்.” என்று முடிவு செய்தவாறு ஆடைகள் அணிந்துகொண்டு ஸ்டுடியோவிற்கு போய்விட்டாள் நடிகை ரம்பா.

மோகன் ஒரு சினிமாப்பத்திரிகையின் ஆசிரியன். கலை உலகை கண்யமாக்க-நடிகைகளின் வாழ்வை வளம்படுத்த பாடுபடும் இளைஞன். அவனது பத்திரிகை ஒரு சீர்திருத்த வெளியீடு என்பதை ரசிகர்களே ஒப்புக்கொண்டுள்ளனர். இளம் நடிகைகளை பேட்டிகண்டு அவர்களது வரலாறுகளை தீட்டுவான் பத்திரிகையில். அந்த வகையில் தான் நடிகை ரம்பாவின் நட்பு கிடைத்தது மோகனுக்கு. அவளது உருவப்படத்தை மூவர்ணத்தில் முகப்பில் போட்டு அறிமுகப்படுத்திவைத்தான். அவள் புகழ் பரவியது. அவளும் பட உலகில் முன்னணி நட்சத்திரமாக ஜொலிக்கவாரம்பித்தாள். மோகனின் உதவியால் தான் ஒரு லட்சரூபாய் நட்சத்திரமாகலாம் என்று எண்ணம் உதிக்கவே அவனை தன் வசப்படுத்த முயன்றாள். சாகசம் செய்தாள். முடிவாக அவனை கடனுக்காக மணந்து கொள்வது என்றும் துணிந்துவிட்டாள். ஆனால் அவன் ஊ...உம் இடந்தரவேயில்லை. அவளைப்பற்றி சிந்தித்தான். அவளது வரலாறே அவளுடைய குணப்பண்புகளைக் காட்டியது. அவளும் எவ்வளவோ சாகசங்கள் செய்தாள். மன்றாடினாள். ஆனால் அவன் யோசித்துக்கொண்டிருந்தான் முடிவை தெரிவிக்காமலேயே

அன்று ஒரு நாள் மாலை ரம்பாவின் வீட்டிற்கு வந்தான். அவளும் அப்போதுதான் ஸ்டுடியோவிலிருந்து வந்தாள். வந்ததும் வாராததுமாக உபசாரங்கள் வெகு பலமாக இருந்தது. அவனுக்கென்னமோ இது சகஜமாகத்தான் தோன்றியது. மெதுவாக ஆரம்பித்தாள் நண்பரே, நான் சினிமா நடிகை. தவறியவள் ஆனால் இனியாவது கண்யமாக வாழ விரும்புகிறவள். ஆகவே நடிகைகளை சீர்திருத்த பாடுபடும் தாங்கள்...என்னை... மணந்து லட்சியத்தை நிறைவேற்றுங்களேன். தங்களால்தான் என் வாழ்வை செப்பனிட முடியும். என்னால் தங்களது பத்திரிகையும் செழிக்கும், என்றாள். அப்போதைய 'நடிப்பு' பரிதாபமாக இருந்தது. உண்மையாகவும் தெரிந்தது அவன் மனமும் தளர்ந்தது. மீண்டும் சிந்தனையை ஓடவிட்டான்.

“ஆம்! அவளது பாழ்பட்ட வாழ்வை வளம்படுத்த வேண்டும். இத்துறையில் நாம் துணிந்து ஈடுபடுவோம். அவள் வாழ்விலும், என் வாழ்விலும் 'புதுமை' யை ஏற்படுத்தவேண்டும். நமது 'நல்ல பாதை' வருங்கால இளைஞர்களுக்கு வழி காட்டியாக விளங்கும். நடிகைகளின் மீதுள்ள சாபக்கேடும் நீங்கும்” என்று முடிவு செய்தவாறு அவள் விருப்பத்துக்கு இணங்கினான்.

அவள் மகிழ்ந்தாள், பட்ட கஷ்டத்துக்கு பலன் கிடைத்து விட்டது என்று, அவர்கள் உள்ளம் ஒன்றுபட்டது. அவள் உண்மையாகவே அவனை நம்பினாள். ஆரம்பத்தில் நடிப்பாக இருந்தாலும், அவனது குணப்பண்புகளைக் கண்ட பிறகு அவனை முழு மனதுடன் காதலித்தாள். கல்யாணம் மட்டுமில்லாமல் நாட்கள் சென்றன.

ஒருநாள் அவனது வீட்டிலே, பெரும்புள்ளி ஒருவன் ரம்பாவை மணம் செய்துக்கொள்ள விரும்புவதாகவும், தனது சொத்து முழுவதையும் அவளுக்கே அர்ப்பணித்து விடுவதாகவும், அவள் காலால் இட்ட வேலைகளை தலையிலே செய்து முடிப்பதாகவும். அதனால் அவன் ஒற்றைக்காலில் நின்று தவம் செய்வதாகவும் 'மாமா' சொல்லிக் கொண்டிருந்தான் ரம்பாவிடம். அப்படியானால் இந்த புள்ளியை விட்டுவிடக் கூடாது என்றாள் தாய்க் கிழவி. 'ஆமாம் இது ஒரு பெரிய சான்ஸ் தான்' என்றாள் ரம்பா. 'அப்படியானால் மோகன்!' மோகன்! என்றது மனம்.

'ம், அன்னக்காவடி மோகனனுக்கு வழியைக்காட்டி அனுப்ப வேண்டியதுதான்' என்றாள் முடிவாக.

இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்தான் மோகன். அவன் மனம் கொதித்தது. அவளிடம் போய் வஞ்சம் தீரப் பேசினான். ஆனால் அவள் கொடுத்த பதில்! 'நான் சிளிமாக்காரிதானே. எனக்கு வேண்டியது பொருளும், புகழும் தான். அதிலும் ஒரு நடிகையை நம்பும் எந்த மடையனையும் நான் 'இதுவரை' யில் கண்டதில்லை” என்றாள். அவன் கல்லானான்; அவள் சிரித்தாள்.

சமுதாயப் பொதுமக்கள் சிந்தித்துப் பார்ப்பார்களா?

—ஜெ. ராமகிருஷ்ணன்—

நம் இந்தியா தேசம் 15.8.47 இலிருந்து பிரிட்டிஷார் ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்துவிட்டது யாவரும் அறிந்ததே. ஆனால் நம் திராவிட நாடு, வட நாட்டு கொள்ளை லாபமடிக்கும் முதலாளிகளிடமிருந்தும், சமூகத்தை பாழ்படுத்தி வைத்திருக்கும் வைதீகப் பித்தமும், போலி பக்தியும், கொண்ட சுயநலவாதிகளின் ஆதிக்கத்திலிருந்தும் இன்னும் விடுதலை அடையவில்லை என்பது கவனிக்க வேண்டுகிறேன். நம் சமுதாயத்திலே மக்கள் வறுமைப் பிணியால் வாட்டமுற்று, பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டு அவதியுற்றுத் தவிக்கையில், கடவுளரின் பெயரால் நடத்தப்படும், உற்சவங்களுக்கும், கும்பாபிஷேகங்களுக்கும் பொதுமக்கள் பணத்தை விரயம் செய்வது எவ்வளவு மதியீனமான காரியம்என்பதை பகுத்தறிவுள்ள அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவ்வித திருவிழாக்களால் பொதுமக்களுக்கு ஒருவித நன்மையும், பயனும் இல்லை, கடவுளரின் பெயரால் பொதுமக்களிடமிருந்து எவ்வளவு பணத்தை பறிக்க முடியுமோ அவ்வளவையும் சுயநல வெறிபிடித்த வைதீகக் கும்பல், பலவிதங்களில் கொள்ளையடித்து வருகின்றனர். இவ்விதமாக மக்களை பக்தியென்னும் மயக்க மருந்தை யூட்டி மதியீனர்களாக்கும் இந்த திருவிழாக்கள் நடத்தப்படுவதை பொதுமக்கள் தடுக்க வேண்டும். புண்ணியமென்றும், பாவமென்றும், இன்னாருக்கு இன்னபடி தலையில் எழுதிவைத்தபடி தான் எல்லாம் நடக்கும், என்றும் மக்களுக்கு உபதேசம் செய்து மக்களை மடையர்களாக ஆக்க முயற்சி செய்துவரும் சதிகாரக் கும்பலை பொதுமக்கள் வெறுக்க வேண்டும். “உலகத்தில் மானிடர் யாவரும், மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை இம்மூன்றையும் நீக்கி, உண்மை பக்தியுடன் கடவுளை பூஜிப்பவனே மோக்ஷம் அடைவான் ஆகையால் பொதுமக்கள் மோக்ஷம் அடைவதற்கு ஆண்டவனை அனுதினமும் பூஜை செய்ய வேண்டும்” என்று ஊராருக்கு உபதேசம் செய்யும் மடாதிபதிகள், மறைவில் பெண்களுடன் லீலைகள் புரிந்து கொண்டும், பொதுமக்கள் பணத்தை வீண்விரயம் செய்து கொண்டும் அட்டூழியங்கள் புரிந்து வருகிறார்கள்! இவைகளையெல்லாம் பொதுமக்கள் அறியாமல் அம்மடாதிபதிகளை கடவுளின் கலியுக அவதாரம் என்று புகழ்ந்து அவனுடைய அடிகளிலே வீழ்ந்து வணங்குகின்றனர்! இந்நிலை மாற வேண்டாமா என்று சமூக சீர்திருத்த வாதிகள் சிந்திந்துப் பார்க்க வேண்டும். இவ்வாறு பலவிதங்களில் பொதுமக்களை ஏமாற்றி பணம் பறித்து வரும் போலி வேஷதாரிகளின் வஞ்சக சூழ்ச்சிகளை வீழ்ச்சியடையும்படி செய்ய வேண்டியது சமூக சீர்திருத்தவாதிகளின் கடமையாகும். நொண்டி, குருடு, செவிடு' போன்ற அங்கஹீனர்களான பிச்சைக்காரர்கள், பிச்சை கேட்டால் பிரம்பினால் அடிப்பதாக பயமுறுத்தி அனுப்பிய பணக்காரன், கடவுளின் ரிஷப வாகனத்தின் கால்கள் ஒடிந்துவிட்டதற்கு 200 ரூபாய் செலவு செய்து புது கால்களை அமைத்துக் கொடுக்கிறான். படிப்பு வாசனையற்ற பிள்ளைகளின் அறியாமையைப் போக்க, புது பாடசாலைகளை ஏற்படுத்த பண உதவி செய்ய மறுக்கும் பணக்கார வர்க்கம், கபாலீசுவரர் கோபுரத்தை புதுப்பிக்கும் பணிக்கு, ஆயிரக் கணக்கிலும், மற்றும் கும்பாபிஷேகம், அறுபத்திமூவர் உற்சவம் போன்ற உற்சவங்களுக்கும் ஆயிரக் கணக்கில் பணத்தை தருமம் கொடுத்து புண்யம் சம்பாதித்துக் கொள்கிறார்கள்! இன்றைய சமுதாயத்திலே பணமும், செல்வாக்கும் உள்ள ஒருவன் செய்யும் அட்டூழியங்களும் வெளிவராமலே மறைந்து போகிறது. தப்பித்தவறி வெளிவந்தாலும் அவன் தப்பத்துக் கொள்ள எத்தனையோ வழிகள் இருக்கின்றன. பரம ஏழைக்கோ இவ்வுலகில் புகலிடமில்லை. நீதி, ஒழுக்கம், சர்க்கார் சட்டம், சமூகக் கட்டுப்பாடு எல்லாம் அவனுக்கு விரோதமாக இருக்கிறது. இன்று பெரிய செல்வந்தர்களாகவும், லட்சாதிபதி, கோடீஸ்வரர்

5-ம் பக்கம் பார்க்க

இந்திய முஸ்லீம்களே!

இந்திய முஸ்லீம்களே! அன்பு மிக்க தோழர்களே!

இன்று இருக்கும் நிலவரத்தைக் கவனித்து இனி நாம் என்ன செய்ய வேண்டும் யாருடன் சேர்ந்திருக்க வேண்டு என்று கவனிக்க வேண்டும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் நமக்கென்று இருந்த ஒரு கட்சி இப்பொழுது கலைக்கப்பட்டு துணையின்றி வாழ்வதாகி விட்டது. கலைக்கப்பட்ட சங்கத்தை நாம் மீண்டும் நிரூபிக்கவேண்டு மென்றால் (லைசென்ஸ்) அனுமதி கிடைக்காது, இந் நிலையத்தில் நாம் யாருடன் சேர்ந்திருக்க வேண்டும், என்ன செய்யவேண்டும் என்று கவனிப்போமானால் நம்முடன் இணை பிரியாமல் இருக்கும் திராவிடத் தோழர்களுடன்" திராவிட நாட்டுக்காக நம் உயிரை தியாகம் செய்ய வேண்டுமென்ற மனப்பூர்வமாய் திராவிடக் கழகத்தில் சேர்ந்து விடவும்.

"முஸ்லீம்லீக்" இருந்த காலத்தில் லீக்கில் சேர்ந்திருந்த சிலர் தேசிய முஸ்லீம்களின் பொய் பிரசாரத்தைக் கேட்டு லீகிலிருந்து விலகிவிட்டார்கள் (ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை சுவர்க்கத்தை விட்டு வெளியேறச் செய்த இப்லீஸைப்போல்) தேசிய முஸ்லீம்கள் ஏற்பட்டீர்கள், தேசிய முஸ்லீம்களின் வார்த்தைகளைநம்பியதால் நாம் இந் நிலைமையில் இருக்கிறோம். உலக உத்தமர் என்று போற்றும் மாகாத்மா காந்தியாரைக் கொலைசெய்த கோரக் கொலைக் கூட்டத்தாரும் ஒரு சங்கம் என்றும் ஒரு பெயரென்றும் நாட்டில் நிலவி வருகிறது, நமக்கோ ஒரு சங்கம் நிரூபிக்க அனுமதி கிடையாது, ஆகையால் நாம் நம் கடைசி உயிர் வரை ஒரே சங்கத்தில் சேர்ந்து ஒரே மனதுடன் திராவிடத் தோழர்களுடன் சேர்ந்து இருப்போமானால் நமது பிற்கால வாழ்க்கையும் கவலையின்றி நடத்தலாம்.

இப்பொழுது சில தேசிய முஸ்லீம்கள் பெரியார். ஈ. வெ. ரா. அவர்களைப்பற்றியும் அவர் சங்கத்தைப் பற்றியும் தூற்றி பேசுகிறார்கள். அதை சற்றும் கவனியாமல் திராவிடக்கழகத்திற்காக உழைப்போமானால் திராவிடநாடு அடைந்தே தீருவோம். பாகிஸ்தானில் இருக்கும் முஸ்லீம்களுக்காக மன்றாடி பாகிஸ்தானை வாங்கிக் கொடுத்தோம், பாகிஸ்தானுக்காக எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்தோமோ அவ்வளவு கஷ்டங்கள் திராவிட நாட்டுக்காகவும் அனுபவித்தால் ஒரு தடையின்றி திராவிட நாடும் அடையலாம். திராவிடநாடு அடைந்தால்தான் திராவிட முஸ்லீம்களுக்கு நன்மைகள் ஏற்படும். நம்முடன் நன்மை செய்வாருடன் நாமும் நன்மை செய்யவேண்டு மென்று நபிகள் (நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இந்தியன் யூனியன் செய்யும் கொடுங்கோல் ஆட்சியைவிட வெள்ளையன் ஆட்சியே மேலாகும். அன்று வீரம் பேசிய தேசிய முஸ்லீம்கள் எங்கே போய்விட்டார்களோ? தெரியவில்லை, ஒருக்கால் அவர்களுக்கு வெளியேவர (அவர்களின் புருஷன்) இந்தியன் யூனியன் உத்திரவு கொடுத்ததோ இல்லையோ, அல்லது இவ்வுலகத்தை விட்டே மறைந்து விட்டார்களோ, என்னமோ தெரியவில்லை? தேசியமுஸ்லீம்களின் வாயில் பூட்டியிருக்கும் லஞ்ஜப் பூட்டை உடைத்தால்தான் அவர்களுக்கு சுயபுத்தி ஏற்படும் என்று எண்ணுகிறேன் இந்தியமுஸ்லீம்களுக்காக" காலஞ்சென்ற ஜனாப்ஜின்னா அவர்களும்திராவிடக் கழகத்தில் சேரும்படி எச்சரிக்கை செய்து இருக்கிறார். அதையாகிலும் பின்தொடர்ந்து திராவிடகழகத்தில் சேர்ந்து நன்மைகள் தேடிக் கொள்ளுங்கள். இனியும் தேசிய முஸ்லீம்களின் பொய் பிரசாரத்தை கேட்டால் நாம் அழிவது நிச்சயம் என்பதை உறுதிகொள்ளுங்கள். "வஸ்ஸலாம்"

ஆட்டு மூளை கொண்ட காட்டு மிராண்டிக்கு நற் சந்தர்ப்ப எச்சரிக்கை

[டி' பி. அபதுல் கபூர் ; அக்பராபாத்]

ஆட்டு மூளை கொண்ட ஒரு காட்டு மிராண்டி வாரப் பத்திரிக்கையில், இஸ்லாம் மீது சு. ம. கண்ணோட்டம் என்ற ஹெட்டிங் கொடுத்து கருப்புச் சட்டை அணிந்த முஸ்லிம்களுக்கு எச்சரிக்கை, என்ற கட்டுரை எழுதி இருந்த கே. கே: குத்தூஸ் சாயபுக்கு (மூட புத்தியுள்ள இப்லீஸின் மகனுக்கு) ஓர் எச்சரிக்கை.

பாகிஸ்தான்: பாகிஸ்தான் என்ற பொய் கூச்சலிட்டவர்கள் நாமல்ல, பகல் கனவை நினைவாக்கிய வீரர்கள் என்பதை உன் எழு தலைமுறையும் மறக்க முடியாது. கருப்பு இஸ்லாமுக்கே நேர் விரோதம் என்று எந்த மூடனும் சொல்ல மாட்டான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு "காலி கம்லி வாலே" கருப்பு கம்பிளி உடையவர் என்ற நாமத்தால் உலகம் அழைப்பது மறந்து விட்டாயா? மக்கமாநகரம் பிடித்தவுடன் வெற்றிக் கொடி நாட்டியதும் கருப்பு, குர் ஆனின் எழுத்துக்களும் கருப்பு, உன் பார்வைக்கு கொடுத்து இருக்கும் 2 கண்களில் புள்ளிகள் இருப்பதும் கருப்பு என்பதை மறந்துவிட்டாயா? கருப்பின் மகிமை உனக்கென்ன தெரியும், கருப்பின் மகிமை உணராமல் மூடபுத்தியால் எழுதி விட்டாய், கருப்புச் சட்டை அணிந்த முஸ்லீம்கள் அழிவது சிரமம்- ஆனால் உன் போல் லஞ்சக்கார பேய்கள் உலகில் இருக்கும் வரை இஸ்லாம் ஈடேறுவதில்லை என்று கதர் ஆடை அணிந்து வீரம் பேசிய தேசிய முஸ்லிம் எங்கே போய் விட்டான்? இன்று முஸ்லிம்கள் மீது நடக்கும் அக்கிரமத்துக்கு கண்ணால் பார்ப்பதற்கு குருடனும் காதால் கேட்பதற்கு செவிடனும் ஆகிவிட்டானா? அல்லது இவ்வுலகத்தை விட்டே அழிந்து விட்டானா? முஸ்லிம்கள் ஐந்தாம் படையினர், தேசத் துரோகிகள் என்று தூற்றிப் பேசுவதை நீர் கேட்கவில்லையா? இன்னுமா உன் கண்கள் திறக்கவில்லை. (குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு) போல் லஞ்சத்துக்காக முஸ்லிம்களை தூற்றிப் பேசாதே. காஷ்மீர் போர்க்களத்தில் பிரிகேடியர் உஸ்மான் இந்தியன் யூனியனுக்காக தன் உயிரை தியாகம் செய்யவில்லையா? இவ்வித நன்றிகளை அறியாமல் ஐந்தாம் படை, தேசத் துரோகி என்று சொல்லுகிறார்களே. உனக்கு வெட்கமில்லை—இனியாவது இவ்வித வார்த்தைகளை பேசாமல் இருப்பாயாக. உனக்கு ஆண்டவன் நல்ல புத்தியை கொடுத்து நேரான வழியில் நடத்துவானாக. ஆமீன்—

வரட்டு மூளை கொண்ட நீ, பின் புத்தி படைத்த நீ: நிதான புத்தியிழந்த நீ, இப்பொழுதே திருத்திக் கொள்வது நலம். இல்லையேல் சந்தி சிரிக்கும்.

ஆனால் ஒன்று. தோட்டம், துறவு, கூட கோபுரம், மாட மாளிகை முதலிய இடங்கள் உனக்கல்லவே. உனக்கு ஏற்பட்டதெல்லாம் குப்பை மேடு. அதனால்தான் உனக்குத் தகுந்த அதாவது வரட்டு மூளைகொண்ட உனக்கு ஆட்டு மூளை சொண்ட ஒரு காட்டு மிராண்டி பத்திரிகையில் இடம் கிடைத்தாற் போலும்.

உன்னை ஆதரிக்கும் அப்பத்திரிக்கையும் தன் தொழிலான செம்பு தூக்கிக் கொள்வதே நலம். பிச்சைக்காசு வாங்கிக் கொள்வதற்கானாலும் சரி அல்லது தண்ணியுடன் வாயல் காத்துக் கொண்டிருப்பதற்கானாலும் சரி. தக்க வேலை இதுவே யாகும். தனக்கு எது பிடித்தமோ அதைச் செய்யட்டும். அதைப் பற்றிக் கவலையில்லை. பத்திரிகை நடத்துவதிலிருந்து தப்பித்துக் கொள்வதே பிழைக்கும் வழியாகும்.

மந்திரிகளும் மக்களும்

மணி மருதன்

இனிதாக உண்பதற்கு எண்ணர வகை
இருக்கு துங்கோ மந்திரிகள் மாளிகையிலே
குனிந்துபோக குடிசையாம் நம்மவருக்கு
குடலில் ஒட்டி உணர்ந்துப் போகும் கூழும் நமக்கு,

மணிக் கொரு பணியாலும் மாறி வருவான்,
பணித்திடும்பணியை ஓடிப் பதரியே செய்வான்
பிணி வந்துப் படுத்தாலும் பார்ப்பவர் இல்லை
பிள்ளைகளும் பெண்டாட்டியும் பட்டினிப் படுக்கை-

காதி உடை சண்பரிக்கும் ஆடைகள் உண்டு
கண்டப்படிசுற்றி வரக் கார்களும் உண்டு
பாதி உடல் மூடுதற்கு போதிய துண்டு
பழையதுவும் இல்லாமலே பாடுபடுகிறோம்.

சாய்வதற்கு சாய்வு மேசை நாற்காலி யுண்டு
சந்தோஷத்தைக் கேட்க செய்தி ரேடியோ உண்டு
பறய் இருந்தால் போர்த்த இல்லை பசிக் கொடுமையை
பகர்ந்திடவும், கேட்பாரில்லை சுகம் வருவதென்றோ

அற்ப நோய்க்கு அலறி யோடி ஆயிரம் டாக்டர்கள்
அடிக்கடியும் வந்துப் போவார் ஆனால் நமக்கு
பர்பல நோய் வந்துப் பலநாள் படுத்தால் தரையிலே
பச்சைத்தண்ணிக் கொண்டுக்கொடுக்க பாரினில் இல்லை

செய்தி எல்லாம் சீரி வரும் செய்தி தாள்களில்
சொற்பொழிவும், படத்திறப்பும், கற்கள் நாட்டலும்
மெய் வழியாம் மாடுப் போல மாண்டு மடியுரோம்
மிக்க நம்ம குறையை மேதினி அறிய செய்பவர் யார்?

கோயில் செல்வார் கும்பிடுவார் கோடி வணக்கம்
குனிந்துக் குனிந்து செய்வார் கேட்டவரமதுக்கிட்ட
நோயில் வாடும் ஏழை மக்கள் நெனவு வராது
வாயிருக்கும் தெய்வங்களை வாழவைப்பாரா?

உயிர்களிடம் அன்பு வேணும் உண்மை வழி என்பார்
உன்னதமாம் காந்தீயமும் ஓங்குக! என்பார்
உயிர் உள்ள ஒருவன் வீடு வந்து நின்றாலே
ஓட்டச் சொல்வார்; நேரமில்லை, சட்டம் வகுப்பார்.
இந்திரனைப் போன்றவர்கள் இருக்கக் கூடாது,
என்று சொல்லி மாதம் பெறுவார் எண்ணாயிரமாக
மந்திரிகள் போசம் செய்து இன்ப வாழ்க்கையில்
மாக்கள் அல்ல மக்கள் நம்ம துன்ப வாழ்க்கையில்

"நபிகள் பிறந்ததின விழா"

நபி பிறந்ததின விழா உடுமலை நகர சபைத் தலைவர் தோழர் எம். எஸ். கனகராஜன் அவர்கள் தலைமையில் பொள்ளாச்சி ரோடு ரைமானியா ரைஸ் மில் மைதானத்தில் மாலை 7 மணிக்கு கொண்டாடப்பட்டது. அது சமயம் தோழர் திருச்சி கே. எ. பி. விஸ்வநாதன் அவர்களும் கணியூர் பண்டிட் கே. அப்துல் சுக்கூர் ப்பாஹி அவர்களும் நபி பிறந்த வரலாறு பற்றியும், அவர் கொள்கை பற்றியும், அரிய சொற்பொழி வாற்றினார்கள். முடிவில் மீலாத் கமிட்டியின் சார்பாக, நகர சபை அங்கத்தினர் ஆர். சிக்கந்தர் பாட்சா சாஹிப் வந்தனம் கூற கூட்டம் இரவு 10 மணிக்கு இனிது முடிந்தது. (ஒரு நிருபர்)

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்
உடுமலை பீரங்கி
ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்
வாரப்பதிப்பு.

சென்னை	சனி	5-2-49

உண்ணாவிரதம்

ஒரு வக்கீல் தனது கக்ஷிக்காரனுக்கு "பே, பே" என்று சொல்லும்படிக் கற்றுக் கொடுத்து, அதையொட்டி வக்கீலானவர், கோர்ட்டில் தனது கக்ஷிக்காரர் புத்தி ஸ்வாதீனமில்லாதவர், அதாவது முதல்தர பைத்தியக்காரன் என வாதாடி கேஸை தன் கக்ஷிக்காரர் பக்கம் ஜெயித்துவிட்டு வெளியில் வந்து அதே வக்கீல் தன் ஊதியத்துக்காக கையை நீட்டுகையில் அதே கக்ஷிக்காரன் கொஞ்சமேனும் தங்கு தடையின்றி இந்த வக்கீலுக்கும் சற்று உரக்கவே "பே, பே," எனச் சொல்லி இருகையையும் விரித்தாராம். எனக்குமா இந்த "பே பே" என்று வினவினாராம் வாதித்த வக்கீல், சட்டெனக் கக்ஷிக்காரன் "உனக்கு மாத்திரமல்ல. ஆனால் உங்கப்பனுக்கும், உங்கள் பாட்டனுக்குங்கூட இதே பேபேதான்" என்று சொல்லி போய்க் கொண்டிருந்தானும்.

இது மாதிரி அப்போதிருந்த அவசியத்துக்காகவோ அல்லது அவசியம் ஏற்படுத்திக் கொண்டோ, மக்களின் நிலை தெரியாது சொல்லி வைத்த பாடம், ஆட்டி வைத்த ஆடல் எல்லாம் இப்போது நமக்கே கழுத்தறுப்பாக மாறிவிட்டதை நினைக்சு வருந்துவதற்கொன்றுமில்லை, எல்லாம் நம் பிசகேயாகும்.

இன்னாரிடம் இன்னபடி நடந்து கொள்ளவேண்டும் என்பது யாவரும் அனுசரிக்க வேண்டிய முறையையும் உண்மையுமாகும். அதற்கு படிப்பும் படிப்புக்கேற்ற அறிவும், அறிவு மாத்திரமல்ல பகுத்தறிவும் தேவை. ஆனால் இதே பகுத்தறிவை வளர்க்கக் கூடிய கழகஙகளும், சங்கங்களும் பத்திரிகைகளும் இன்னும் மற்றைய யாயிம் கடைனத்திற்குரியவைகளாக கருதப்பட்டு வருகின்றன.

ஆங்கிலேயனின் பேரிலிருந்த அறுவறுப்பைக்காட்ட அன்று பிடித்த கருப்புக் கொடி நமக்கே காட்டப்படுகிறது. மக்களின் கவனத்தைக் கவர்ந்து மக்களின் ஆதரவைத் திரட்டவும் கையாண்ட வேலை நிறுத்தங்களும் உண்ணாவிரதங்களும் இப்போதைய நிலையில் இதே காங்கிரஸ் சர்க்காரைப் படிய வைக்கவோ அல்லது ஆட்சியாளரின் கவனத்தைக் கவரவோ கையாளப்படுகின்றது. இதே வேலைநிறுத்தத்திற்கும் உண்ணாவிரதத்திற்கும் உபாத்தியாயர்களாயும் வழிகாட்டிகளாகவும் இருந்த காங்கிரஸ் காரர்களும் காங்கிரஸ் ஆட்சியும் இன்று நேர்மாறாக திரும்பி அடக்கு முறைகளிலும் வேண்டா நடவடிக்கைகளிலும் தலையிட வேண்டிய சங்கடமான நிலையில் தானிருக்கிறார்கள். இது பல பேர் சொன்னதும் சொல்லிவருவதேயாகும்.

சமீப காலமாக கணபதி ஐயர் என்றொருவர் கடற்கரையில் சில நாட்களாக உண்ணாவிரதமிருந்து வருவதாக புரளி ஏற்பட்டுவருவதும், தன்மானமில்லா சுய நலப் பத்திரிகைகள் இதை பிரமாதமாகப் விளம்பரயப்படுத்தி வருவதையும் நேயர்கள் அறிவாளர்கள். இதுவிஷயமாய் இச்சமயத்தில் நாம் ஒன்றும் எழுத அபிப்பிராயப் படவில்லையாயினும் நம் மதிப்பிற்குரிய ஆட்சியாளர் மக்களின் க்ஷேமத்தைக் கருதி ஞாயத்தை வழங்குவார்களா? அல்லது ஒரு நபரின் பூச்சாண்டிக்கும் சில நயவஞ்சக சுயநலப் பத்திரிகைகளுக்கும் அஞ்சி உண்ணாவிரதத்துக்குப் பணிந்து கொடுத்து உற்றதைச் சய்யத் துணிவுகொள்ள அஞ்சுவார்களா என்பதே இங்கெழும் பிரசினை ஒருவேளை விட்டுக்கொடுத்து விட்டாலோ அல்லது இன்னும் சிலகாலம் தள்ளிவைப்போம் என்ற நொண்டி சமாதானத்துடன் காரியங்களை மழுப்பதுற்பட்டாலும் மக்களின் இகழ்ச்சியே ஏற்படும் என்பதை எச்சரிக்க விரும்புகிறோம். அதனுபி எவ்வித எதிர்ப்பு ஏற்பாடாலும் மறுப்பு உண்டானாலும், சண்டித்தனம் செய்தாலும், ஒரு முண்டம் உயிர் துயர்ந்தாலும் எதையும் சட்டை செய்யாது ஆட்சியாளர் எடுத்துக்கொண்ட "ஹிந்துமத பரிபாலன மசோதாவைக் சட்டமாக்கிவைத்து பொது மக்களின்பணம் விரையமாகாதபடித் தடுத்தாக வேண்டிய கடமையை ஆட்சியாளா கைவிட முடியாது அதுவே எங்களது பணிவான வேண்டுகோளுமாகும்.

இது உண்மையா?

குட்டிச்சாத்தானே அருள்புரியாயா?

1. மதராஸ் கடற்கரையில் ஒரு பார்ப்பனர் உண்ணாவிரதமிருந்து வருவதாக புரளி பண்ணிவருவது உண்மையா?

2. அவருடைய பெயர் சத்தியானந்த சரஸ்வதி என வழங்கப்பட்டு வருவது உண்மையா?

3. அவருடைய சொந்தப் பெயர் கணபதி ஐயர் என்பது உண்மையா?

4. அவர் தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்தவர் என்பது உண்மையா?

5 அவர் காங்கிரஸ் தொண்டரென அறிமுகப் படுத்திக் கொண்டுவந்தது உண்மையா?

6. அவர் அலிபூர் ஜெயிலில் இருந்தது உண்மையா?

7. தண்டி உப்பு சத்தியாகிரகத்தின் போது காந்தியாரிடம் சென்றது உண்மையா?

8. காந்தியார் இவரையும் இவரின் கோஷ்டியாரையும் ஏற்றுக்கொள்ள முடியாதெனச் சொல்ல சத்தியாகிரகம் செய்யப்போவதாக மிரட்டியது உண்மையா?

9. மிரட்டலுக்குப் பதிலாக காந்தியார் இவரை விரட்டியடித்தது உண்மையா?

10. இவருக்கு எவ்வித சொத்தும் இல்லாமல் ஊராரை அண்டிப் பிழைத்து வந்தது உண்மையா?

11. இவர் ஹைதராபாத் பக்கம் தன் ஜீவனோபாயத்தை முன்னிட்டு சுற்றித் திரிந்தது உண்மையா?

12. ஒரு ஜமீனை அடுத்திருந்தது உண்மையா?

13. அந்த ஜமீனின் சொத்து பூராவும் இவருக்குச் சேரும்படியான வழியை, எவ்விதத்திலோ, உண்டாக்கிக் கொண்டார் என்பது உண்மையா?

14. சொத்து எவ்விதம் இவருக்குக் கிடைத்தது என்பதற்குத் தக்க ஆதாரம் ஒன்றுமில்லை என்பது உண்மையா?

15. அதனால் சொத்து கிடைத்தது நேரான வழியில் அல்ல என ஊரார் பேசிக்கொள்வது உண்மையா?

16. இவரே, தன்வாயால் தனக்கு 15 லக்ஷ ஆஸ்தி இருக்கிறதென சொல்லிக்கொண்டு அலைந்தது உண்மையா?

17. இவர் அகில இந்திய ஆச்சர்ண சங்கத்துக்குத் தலைவர் எனச் சொல்லிக்கொள்வது உண்மையா?

18. இச்சங்கத்துக்கும் உடுப்பி மடாதிபதிகளுக்கும் தொடர்பு இருக்கிறது என்பது உண்மையா?

19. அந்த மடாதிபதிகளின் தூண்டுதலினாலேயே இவர் உண்ணாவிருதமிருப்பதுவும் வெளிக்குக் காட்டியும், பொது மக்களின் கவனத்தை இழுக்கவும் ஆரம்பித்திருக்கிறார் என்பது உண்மையா?

20. இவருடைய உண்ணாவிரதத்தை விளம்பரப்படுத்தவும், செய்தித் தாள்களுக்கு விவரங்கள் கொடுக்கவும் இந்நகரின் ஒரு உடுப்பி டாக்டரும் அவருடைய சகாக்களுமே உதவிபுரிந்து வருகிறார்கள் என்பது உண்மையா.

21. இவரை சில சுயநலப்பத்திரிகைகள் புகைப்படங்களோடு விளம்பரப்படுத்தி வருவது உண்மையா?

22. ஒரு சாதாரண சேவலைப் படம் எடுத்துப் போட்டு, மலையளவு விளம்பரப்படுத்திய இப்பத்திரிகைகள் ஒரு மனிதனை விளம்பரம் செய்வதில் பின் வாங்குமா என பொதுமக்கள் அலக்ஷியமாகப் பேசிக்கொள்வது உண்மையா?

23. சேவலைத் தரிசித்த சங்கராச்சாரியார் இவ்வுண்ணாவிரதியையும் தரிசிக்க தனது பரிவாரங்களைத் திரட்டிக் கொண்டிருப்பது உண்மையா?

24 இவருக்காக ஒரு அடைப்படைத்த குடிசை அமர்த்தியிருப்பது உண்மையா?

25. அக்குடிசைக்குள் படுக்கை, தலையணைகள், திண்டுகள் தலையணைக்கு வேண்டிய மற்ற சௌகரியங்கள் யாவும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றனவென்பது உண்மையா?

26. இந்த சுவாமிகள் "சுதேசமித்திரன்படி" அல்லது His Holiness 'இந்து'வின்படி, அடிக்கடி அக்குடிசைக்குள் கிரகப்பிரவேசம் செய்வது உண்மையா?

27. இதேஜகத் சுவாமியை இரண்டு ஆட்கள் தேய்த்துத் தேய்த்து வென்னீரில் குளிப்பாட்டிவருவது உண்மையா?

28, இவரின் உடல்பிடிக்கவும் கால்கள் கைகள் பிடிக்கவும் ஆட்கள் (?) நியமிக்கப்பட்டிருப்பது உண்மையா?

29. சென்ற வெள்ளியன்று இவருக்கு ஒன்றரைப் படி பால் கள்ளத்தனமாக அனுப்பப்பட்டதும் அதை அவர் தாக சாந்தி செய்து கொண்டதும் உண்மையா?

30 சென்ற ஞாயிறன்று ஹல்வாவும் பஞ்சாமிர்தமும் (Fruit Salad) அருந்தி சுவாமிகள் தொப்பையை நிறப்பிக் கொண்டது உண்மையா?

31. சிலநாட்களுக்கு முன்னர் சுவாமிகள் தாடிவைத்துக் கொண்டிருந்தது உண்மையா?

32. தாடியை யெடுத்ததற்கும் புதுப்பெயர் பூண்டதற்கும் ஏதோ விசேஷகாரணம் இருக்க வேண்டுமென்பது உண்மையா?

33. இவர் மாடர்ன் ஹோட்டலில் இரண்டு, மூன்று அறைகள் தன் சொந்த உபயோகத்துக்கென எடுத்துக் கொண்டு ராஜ போகத்தில் எல்லாவித சௌகரியங்களுடனும் வாழ்ந்து வந்தது உண்மையா?

34. உடுப்பி மடாதிபதிகளுக்கும் His Holiness அவர்களுக்கும் ஏதோ ஒரு முக்கியமான ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதென்பது உண்மையா?

35. ஓமந்தூராரின் மந்திரி சபையைக் கவிழ்க்கவும் திராவிடக் கழகத்தின் முயற்சியையும் பெருக்கத்தையும் தடுக்கவும் ஒடுக்கவும், அதற்கான பலத்தைத் திரட்டவும் இவ்வுபாயம் கையாளப் படுகிறதென்பது உண்மையா?

"குண்டாந்தடி"

நாட்டுப் பற்று

(C. S. M. ஹபீப்)

நாட்டினிடம் காட்டும் பற்றுக்கே "நாட்டுப்பற்று" எனக்கூறுவர் நாட்டின் நலம், கலை, கல்வி முதலிய வற்றிடம் காட்டும் பற்றே நாட்டுப்பற்றாகும். ஒருநாடு—அது அவனின் தாய் நாடு. அந் நாட்டின் மீது அவனுக்குப் பற்றுத் தோன்றுவது அவனின் பிறப்புரிமை—பெரும் கடமையையும் கூட. ஆயினும் சாதாரண ஒரு பாமர மகனை யெடுத்து "கந்தப்பா! உன் நாட்டுப்பற்று எங்கப்பா?" என்று கேட்டால், "காட்டிலிட்ட கத்தரிக்காய்ச் செடிகள் அத்தனையும் கருகிவிட்டது, கம்புக் கொல்லையில் பக்கத்தூர் வம்புக்கார மாடுகள் வந்து மேய்ந்து விட்டது" என்றுதான் கூறுவான். அவ்வளவு தான் அவனுக்குத் தெரியும் அது அவனின் குற்றமல்ல. அவனிடம் கல்வி இல்லை; எனவே கருத்துமில்லை. ஆகவே நகைப்பிற்கு இடமுமில்லை. இதை நாம் உணர்வதோடு மட்டுமல்லாமல் நாடுமுணரவேண்டும்.

பின் தேசபக்தி என்பதுதான் யாது? ஒரு அழகான தேசப் படத்தை வீட்டிலே மாட்டி தினம் இருமுறை, காலையும் மாலையும் பூஜைசெய்வதல்ல. தேசமென்றால் தேசத்திலுள்ள மக்களைக் குறிக்கும்—அவர்களின் நல் வாழ்க்கையைக் குறிக்கும். பக்தி என்பது முக்தி தரும் கடவுளிடம் காட்டுவதுபோலன்று, அறிவில்லா ஆடவரிடமும், கருத்தில்லா கந்தப்பன் போன்றவர்களிடமும் காட்டும் அறிவின் அடிப்படையே பக்தி எனப்படும்.

எனவே நாட்டுக் கவலையற்ற—கல்வி வாசனை யற்ற மக்களை நல் வழிபடுத்தி, "கந்தா இதுதான் சொந்த நாடு, உன்சொந்த நாட்டின் அரசியல் அமைப்பு இந்த முறை, நீ கொடுக்கும் வரிப்பணத்திலும், வட்டிப்பணத்திலுந்தான் அரசியலை நடத்து கின்றார்கள்—ஆகவே உனக்கும் அரசியலுக்கும் அதாவது நாட்டிற்கும் ஒருவித தொடர்பு உண்டு. எனவே நீ நாட்டுக்கவலையற்றிருப்பது உன் சொந்த வீட்டுக் கவலையற்றிருப்பது போலாகும். மேலும் நீ கொடுக்கும் பணத்திற்கும் உன் செய்கைக்கும், முன்னுக்குப் பின் முரண். உன்பொருள்கள் யாவும் விழலுக்கிறைத்த நீர்கள். ஆகவே இனியாவது உணரு. நாடு உன் நற்சேவையை எதிர்நோக்கி நிற்கிறது. உன்சேவை புனிதமானது—புத்துயிர் அளிப்பதும் கூட" என்றும் புன்மையை மடியச் செய்யும் கருத்துக்களை கல்வி கற்ற நாம் புகுத்தவேண்டும். அதுதான் தேசபக்தி—அன்றுதான் ஒவ்வொருவருக்கும் நாட்டுப் பற்று உதயமாகும்.

நமது நாடு இந்திய நாடேயாயினும், பொதுவாக நாம் வாழும் நாடு—பிறப்பு—வளர்ப்பு மொழி—கலை—கல்வி முதலியவைகளைப் பொருத்து தமிழ்நாடு எனப்படும். தமிழ் நாட்டுப் பற்றுத்தோன்றுவது தமிழர்களாகிய நமக்கு மிக அத்தியா அவசியம். மற்றநாடுகளை விட நமது நாடு அதாவது தமிழ் நாடு முன்னேறவேண்டும், தமிழாட்சி தழைத்தோங்க வேண்டும்—தன்னிகரற்ற தமிழ்க் கல்வி பரவ வேண்டும்—தாள் பணியும் சிறுமை தகர்த் தெறியவேண்டும் என்ற கொள்கைகள் ஒவ்வோர் தமிழரது மனதிலும் உதிக்க வேண்டும்.—நாட்டுப்பற்றைக் குலைக்கச் செய்யும் நயவஞ்சகர்களின் கூற்றைக் கண்டு, கோணம் கொள்ளாமல், நாட்டிற்காகவே உயிர் வாழ்ந்து, நாட்டு நலமே நம் நல மெனக் கொண்டு, நாட்டின் பொருட்டு உயிரை தியாகம் செய்த உத்தம வீரர்களான, லெனினையும், சாக்ரடீசையும், லிங்கனையும் பின்பற்றி நாட்டிற்காகப் பாடுபடுவது தான் நற்சேவையாகும் " நான் தமிழ் நாட்டில் பிறந்தேன், என்னால் இத் திரு நாட்டிற்கு ஓர் புனிதமான சேவை செய்ய 'படும், நாடும் என் சேவையை எதிர் நோக்கியுள்ளது, எனவே இன்றிலிருந்து முனைவேன் என்னும் உறுதி கொள்ளவேண்டும் ஒவ்வோர் தமிழனும்.

நம் நாடு பறந்தது—செல்வம் மிகுந்தது, சீர்மையுற்றது. நேர்மையான ஆட்சி நடத்த நிலங்கள் பல உள. நித்திய புலன்கள்மிக. வற்றா நதி; குன்றா தாதுப்பொருள்; குறையா மின்னொலி! பெறுகும் பொன் வயல் போன்றவை ஏராளம். நாட்டிற்குகந்த பொருள்கள் தேவைக்கு மேல் இருக்க நாடு நல் நிலைமை இழந்து, நசுக்குண்டு, நலிந்து கிடப்பது, நாட்டில் வாழும் மக்கள் தன் சொந்த நாட்டினிடத்துக் காட்டும் பற்றின் தன்மையைப் பகுத்துக் காட்டுவதற்கு ஒப்பாகும்.

ஒவ்வோர் மறத் தமிழனும் மான்புறு கருத்துக் கொள்ளவேண்டும், எமது நாட்டிலே பணக்காரன். ஏழை என்ற பாகுபாடு கூடாது, பொது உடமை வேண்டும், ரஷ்யாவைப்போல. எமது நாட்டிலே ஜாதி மதபேத மிருக்கக்கூடாது, ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற உண்மை வேண்டும் பிரட்டனைப் போல. எமது நாடு அடிமைத்தளையைக் கழற்றி சுயேச்சையாக மிளிரவேண்டும் சுஜ்ஜர்லாந்தைப் போல, எமது நாட்டிலே முடியாட்சிக்கூடாது குடியாட்சி வேண்டும் அமெரிக்காவைப் போல என்றும் அறிய கருத்துக்களைக் கொள்ள வேண்டும். எனவே நாடு மீள, நாம் வாழ நல்லதோர் திட்டம்தேவை. நாட்டுப்பற்று நசுக்கப் படாமலிருக்க தன்னுடு பொன்னுடாக தரணியிலே தலைநிமிர்ந்து நிற்க தனித் தமிழ் நாடு தேவை. தமிழ் நாடு வேண்ட தக்கவர் அனைவரும் முனைய வேண்டும், பாமர நம் சகோதரர்களையும் ஒன்று திரட்ட வேண்டும். எனவே உலகம் உய்ய நாடு நலம் பெற, நற்சேவை

2-ம் பக்கம் தொடர்ச்சி

களாகவும், இருப்பவர்களெல்லாம் நெற்றி வியர்வை நிலத்தில்விழப் பாடுபடும் தொழிலாளர்களின் பேருழைப்பால் கொழுத்தவர்கள் தானே. ஜமீன்தார்களென்றும் மகாராஜாக்கள் என்றும் பெயர் வைத்திருப்பவர்களெல்லாம், பரமஏழைகளான விவசாயிகளின், குடிமக்களின் உழைப்பினால் உயர்வுக்கு, வந்தவர்கள்தானே- கனதனவான்களென்றும் பெயர் வழங்கியிருப்பவர்களெல்லாம் யார்? வஞ்சகத்தாலும், மோசத்தாலும் பலஏழிய குடும்பங்களைப்பாழாக்கிமுன்னுக்கு வந்திருப்பவர்களேயாகும். நிற்க கடவுளை இழிவுப்படுத்தும் முறையில் சினிமாப் படம் எடுக்கக்கூடாது என்று சட்டம் செய்ய சென்னை சர்க்கார் யோசித்து வருவதாக அறிகிறேன் பொதுமக்கள் நலனில் அக்கரை கொண்ட ஆட்சியாளர் வேண்டுமானால் "பொது மக்களுடைய அறிவை எண்ணங்களையும் பாழ்படுத்தும் முறையில் எடுக்கப்படும் நம்பொனு புராணப் படங்களையும் கடவுளரின் காமாந்தகார திருவிளையாடல்களை சித்தரிக்கும் படங்களையும்" படமுதலாளிகள் இனிமேல் தயாரிக்கக்கூடாது என்று சட்டம் இயற்றினால் பொதுமக்களுக்கு நன்மை பயக்கும். சினிமாக் கலையின் பெயரால் நடத்தப்படும் விபசாரமும் ஒழிய வேண்டும். பல் விதங்களிலும் பலவித சுயநலவாலகளால் நம் நாடு சீரழிக்கப்பட்டு வருகிறது, நம் சமுதாயம் முன்னேற்றமடைய வேண்டுமானால்' சதிகாரக் கும்பலின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடையவேண்டும் சமூக சீர்திருத்த வாதிகள் தமிழ் நாட்டின் சமுதாய முன்னேற்றத்திற்கு, உழைக்க வேண்டும். கட்டுக்கதைகளை நீக்கஉண்மை கருத்தை பொதுமக்கள் மனத்தில் பரப்பி பொது மக்கள் சீர்திருந்தவும், சேவை செய்ய வேண்டும், முயற்சி செய்ய வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வீழ்க அடிமைத்தனம்

ஜே. ராமகிருஷ்ணன்
சென்னை.

30. பி, சேமுயல்
தூத்துக்குடி.

31, எஸ், துரைசிங்கம்
பாபநாசம்.

32. எம். வி. ராகவன்
செங்கற்பட்டு

33. இ. வி. சுப்பிரமணியம்
எருகூர். சிங்கா நல்லூர்.

34. எம். ஆர். தண்டாயுதம்
பென்னகரம் (சேலம் ஜில்லா)

35. ஏ. ஆர். பத்மநாபன்
ஆத்தூர் (சேலம்)

36. ஏ. பி. மைதீன்
அண்டு கோ
திருவையார் (தஞ்சை)

37. இரிசன் அறிவு மணி
பங்களூர் தண்டு

38. கே. ஆர். ரங்கநாதன்
செவ்வாப்பேட்டை. சேலம்

39. எஸ். சிவசைல முதலிய
கோவில்ப்பட்டி

40. கிருஷ்ணமூர்த்தி
வெலிங்டன்—டவுன் நீலகிரி

"ஆரிய மாயை"

உடுமலை ஏ. ஜே. பிரான்கலின்

தமிழனின் சிறந்த பண்பும், உயர்ந்த நெறியும், செறிந்த கருத்தும், மறைந்த காரணம் அம்மமதை மிக்கத் தீயவன் தீயச் செயல்களால்தான் தமிழனின் நாகரீகத்தை நாசமாக்கினன் நயவஞ்சகன் ஆரியன்! தமிழனின் சொற்கடுத்துக்களை மாற்றி யமைத்தான் மடையன்!

இறந்துவிட்ட மனிதனுக்கு மோட்சமோ, நரகமோ உண்டென்று நவின்றான் நாணயக்காரன் தன் வாழ்வுத் தழைக்கத் தண்ணீர் வார்த்தான்: தன்னைக்காரன். ஆனால் தமிழன் இறந்து பட்டவனை வீடடைந்தான். என்று சொன்னான். விடுதலை என்பது முதனிலை திரிந்த தொழிற் பெயராக வீடென ஆயிற்று. ஆகையால் வீடடைந்தான் என்பது உலகினின்றும் விடுதலை யடைந்தான் என்பதைத் தான் குறிக்கும். இதைக் கண்டான் கயவன்! எடுத்தான் எழுத்தாணியை. தன்மொழி மோட்சம் என்பதைதான், தமிழ் மொரு வீடு என்கின்றது எனப் பொரித்தான் ஏட்டில்! ஒழிந்தது உண்மை; சிதைந்தது ஒழுக்கம். தகர்ந்தது தன்மான உணர்ச்சி! தோன்றினான் வேதியன். வீழ்ந்தனர் அரசர்; வாழ்ந்தனர் வடவர்! தாழ்ந்தது தமிழ் தழைத்தது விதி!

அன்றும்..இன்றும்..

மான்

வாணிபஞ்செய்ய கப்பலேறினன். இன்று—வறுமையுடன் போராடி உயிரைக் காக்க ரப்பர் காடு நோக்கி கப்பலேறுகின்றான்; அன்று இன்று இரண்டிலும் பொருல் ஒன்று—துறைதான் வேறு.

முதலின்றி பொருள் பெருக்க - உழைப்பின்றி எத்தர்கள் பிழைக்க கடவுள், மதம் தேவைப்பட்டது அன்று; இன்று கதர் சட்டையும், காந்தி பிளாக்கும், பாரதமாதா டிரேட்மார்க்கும் தேவைப்படுகின்றன - அன்று இன்று - இரண்டிலும் தேவை ஒன்று தான்.

மனிதனுக்கு அறிவு வர வர அவனுக்கு இருக்கும் உலகத்தைப் பற்றிய நினைப்பே இல்லாது போகின்றது அந்த நாளில் எழு உலகங்களைப் பற்றி கனவு கண்டு கதை யெழுதித் தள்ளினன்; இன்று சந்திரமண்டலத்தை நோக்கித் தாவ முயன்று கொண்டிருக்கிறான் அன்று இன்று இரண்டிலும் இவ்வுலக மக்களும் அவர் தம் வறுமை மாற்றும் மருந்தும் மறைந்தே நிற்கின்றன.

முத்தைதரும் பொன்னையும் முகந்து செல்ல மரக்கலங்கள் தினம் முத்தமிட்டு நிற்கும் துறைகளுடைய தமிழன் அன்று எகிப்துவரை சென்று

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

வீடுவந்தேன். அன்னை வந்தாள் இழிக்கப்பட்டதே என் அன்பின் ஓவியம் என்றலறினேன், அத்தான் வந்தான். அழிந்ததே என் அருவுருவம் என்றேன். நண்பனைக்கண்டேன். நாசம் செய்தீரே என் நல்வாழ்வை என்றேன்.

அன்றே வெளியேறினேன். சாதி உயர்வு, தாழ்வு, ஏழை,பணக்காரன் என்ற பாகுபாடு கொண்ட சமூகமென்னும் கூறிய கத்தியை, சமத்துவம் பொது உடமை என்னும் மேன்மையான ஓவியம் தீட்டும் கோலாக்க, அழகுதாடி வேந்தனின் அறிவியக்கத்திலே சேர்ந்தேன்.

"அங்கும் இங்கும்"

[உடுமலை எஸ். ரஸாக்]

[அங்கும் இங்கும் என்ற தலைப்பைக் கண்டதும் சிலர் உள்ளங்களில் தேவலோக பூலோக ஞாபகம் ஏற்படலாம். ஆனால் இககட்டுரையில் வந்துள்ள அங்கும் இங்கும் என்ற சொற்கள் மேல் நாடுகளையும், தமிழ் நாட்டையும் குறிப்பன. இனி மேலே படியுங்கள்.]

1. அமெரிக்காவிலே அமேஸான் நதியிலே மூழ்கிக் குளிக்கிறான் ஒருவன் தன்மீதுள்ள அழுக்கைப்போக்க ஆனால், அதே சமயத்திலே தமிழ் நாட்டிலே காவிரியிலே மூழ்குகிறான் ஒருவன் தன் பாபம் போக்க.

2. அங்கே விமானமூலம் உலகத்தைச் சுற்றும்போது இங்கு அரச மரத்தையும், கருங்கல்லையும் சுற்றுகிறார்கள்.

3. அங் நாட்டுமக்கள் விமானத்திலிருந்து பாராசூட் மூலம் கீழே இறங்கி வரும்போது தமிழ்நாட்டு மக்கள் பழனிமலையிலிருந்து படிக்கட்டுகள் வழியாகக் கீழே இறங்குகிறார்கள்.

4. அங்கே கருங்கல் கட்டிடத்திற்கு உபயோகப்படுகிறது. ஆனால் இங்கே கருங்கல் கடவுளாகக் கருதப்படுகிறது.

5. அங்கே மாட்டின் சாணமும் மூத்திரமும் நிலத்திற்கு எருவாகப் பயன்படுகிறது. ஆனால் இங்கே சாணம் பிள்ளையாராகவும் மூத்திரம் பஞ்சகவ்யமாகவும் பயன்படுகிறது.

6. அங்கே, ஆண்டவன் ஒருவன். இங்கே கடவுளர் கணக்கற்றவர்.

7. அங்கே, கருடன் ஒரு பறவை. ஆனால் இங்கே கருடன் ஒரு கடவுளின் வாகனம்.

8. அங்கே மழை பெய்யவில்லை யென்றால் செயற்கை மழையைப் பெய்யச்செய்கிறார்கள். அதே சமயத்தில் இங்கே மழை பெய்ய வர்ணபகவானுக்குப் பூசை நடத்துகிறார்கள்.

9. அங்கே ஒரு பெண்ணுக்குக் குழந்தை பிறக்கவில்லை யென்றால் அதற்குக் காரணம் ஆண் அல்லது பெண்ணிடம் சுக்கில உயிர்களதிகமில்லை என்று நினைப்பர். ஆனால் இங்கோ விதி தீவினைப் பயன் என்று கருதுகிறார்கள்.

10. அங்கு பெண்களுக்குச் சமத்துவம் உண்டு. இங்கு பெண்களுக்கு அடிமைத்தனம் உண்டு.

11. அங்கு தொழிலாளிக்கு முதலிடம். இங்கு முதலாளிக்கு முதலிடம்.

12. அங்கு, பகுத்தறிவு வளரும் வகையில் பாட திட்டங்கள். இங்கு புராணங்களே பெரும்பாலும் பள்ளிப் பாடங்கள்.

13. அங்கு பெண்ணுக்கு வீரம் வேண்டும், இங்குபெண்ணுக்கு அடக்கம் வேண்டும்

14. அங்கே மங்கையரும் மனிதவர்க்கத்தினர் என்று கருதி மதிப்புத் தருகிறார்கள். ஆனால் இங்கே காமந்தணிக்கும் கருவியாகவும் குழந்தைகளை உற்பத்தி செய்யும் இயந்திரமாகக் கருதுகிறார்கள்.

15. அங்கு விஞ்ஞானம் வளர்கிறது. இங்கு அஞ்ஞானம் வளருகிறது

16. அங்கு அஹிம்சையைப் போதிக்கும் கடவுள் ஒன்றுண்டு. ஆனால் இங்கு கோபிகாஸ்திரிகளுடன் கொஞ்சிக் குலாவிய கோபால கிருஷ்ணனும் வனத்திலே வள்ளியை வட்டமிட்டுத் திரிந்த முருகனும் தம்பியின் விஷயத்தில் உறுதுணையாய் இருந்து வள்ளியைத் தன் தம்பிக்குக் கூட்டிக்கொடுத்த விநாயகனும் ரிஷபத்தினிகளின் கற்பழித்து லிங்கம் அறுபட்ட அப்பன் பரமசிவனும் ஐந்துபுருஷர்களிலிருந்தும் ஆறுவது புருடனுடன் கூடி இன்பம் துய்க்க நினைத்த துரௌபதையும் ஆக காமத்தையே கருத்தாகப் போதிக்கும் கடவுளனேகமுண்டு;

17. கலைமகளைக் கனவிலும் கருதாத மேல் நாட்டிலே எல்லோரும் கற்றறிந்தோர். சரஸ்வதிப் பூஜை நடக்கும் நம் நாட்டிலே நூற்றுக்கு நான்குபேர் படித்தவர்கள்.

18. லக்ஷ்மியை லட்சியம் செய்யாத நாஸ்திகர் நிறைந்த அந் நாடுகளிலே அனைவரும் லக்ஷாதிபதிகள் லக்ஷ்மி கடாக்ஷம் பெற்ற நம் நாட்டிலே பஞ்சையர்கள் பரந்திருக்கின்றனர்.

19. சந்திரமண்டலத்திலே குடியேற சோதனை நடத்துகிறார்கள். அமெரிக்க நாட்டிலே ஆனால் இங்கே சந்திரனைச் சாமியாகப் பாவித்து வழிபட்டு வருகிறார்கள்.

20 அங்கே நரகம் மோட்சம் ஆகியவைகளைத் தங்கள் நாட்டிலேயே சிருஷ்டிக்கிறார்கள். ஆனால் இங்கே அவைகளின் திறவுகோல் பார்ப்பனர் கையில் இருப்பதாகக் கூறுகிறார்கள்,

21 அங்கே உலகம் உருண்டை எனக் கண்டுபிடித்தார்கள், இங்கே உலகம் தட்டையெனக் கொண்டு அதை நரகாசூரன் என்ற ராக்ஷசன் பாயாகச் சுருட்டினான் என்று கூறப்படுகிறது.

22. அங்கே ஆண்டவன் பெயரால் அஹிம்சையும், அறிவும் வளர்க்கும் ஆலயங்கள். ஆனால் இந்நாட்டிலே கடவுள்கள் பெயரால் காமக் கோட்டங்கள்.

23. அங்கே மகளுக்கென் அரசாங்கம். ஆனால் இங்கே அரசாங்கத்திற்கு அடிபணிய வேண்டும் மக்கள்.

24. தாய்மொழிக்குத் தனி மதிப்புண்டு அங்கே. ஆனால், லம்பாடி மொழிக்குப் பெருமதிப்புண்டு இங்கே.

25. அவர்களுக்கு மணவிஷயத்தில் உதவிபுரிவது அரசாங்கம். ஆனால் தமிழர்க்குத் துணைபுரிவது பஞ்சாங்கம்.

26, அங்கே விதவைக்கு மறுமணம் உண்டு. ஆனால் இங்கே விதவைக்கு மரணம் நிச்சயமுண்டு.

27. ஒரே நேர்க்கோட்டில் சூரியனுக்கும், பூமிக்கும் மத்தியில் சந்திரன் வரும்போது சந்திரனின் நிழல் பூமியின்மீது விழுகிறது. அப்போது பூமியிலுள்ளவர் கண்களுக்கு சூரியனின்முழு உருவமும் தென்படுவதில்லை, அதுவே சூரிய கிரகணம் என்று மேல் நாடுகளிலே கூறும். அதே சமயத்தில் நம் தமிழ் நாட்டில் சூரியனை ராகு, கேது என்ற பாம்புகள் விழுங்குவதால் கிரகணம் ஏற்படுகிறது என்று கூறுகிறார்கள்.

28. மேலே கூறப்பட்ட உண்மைகளைக் கூறும் ஒருவனுக்கு ஆஸ்திகன் என்று பெயர் அங்கே. ஆனால் அதே உண்மைகளை உரைக்கும் ஒருவனுக்கு நாஸ்திகன் என்ற பெயர் இங்கே.

எனவே, இத்தனை வழிகளிலே பிற்போக்கடைந்திருக்கிறது நம் தமிழ் நாடு. இதைக்கண்டு மனக்கொதிப்புற்றார் எழுபதாண்டு நிறைந்த முதுகிழவரொருவர், தாழ்வுற்ற மக்களைத்திருத்தி, தரணியில் நாம் யார்க்கும் அடிமையல்லோம் என்று முழக்கமிடச் செய்ய நினைத்தார். செய்யவும் முனைந்தார். எங்கும் ஒரே எதிர்ப்பு. எங்கும் ஒரே நகைப்பு. கல்லடியும் சொல்லடியும் பெற்றார். கண்ணீர் வடித்தாரா? இல்லை புன்னகை பூத்த இன்பமுகத்துடன் ஏற்றுக்கொண்டார். இளைஞருலகம் இதைக்கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தது. சுயநலமிகளின் போக்கும் சுயமரியாதைக் கிழவரின் தளரா உழைப்பும் அவர்களுள்ளத்திலே ஓர் பெரும் புரட்சிக்கனலை மூட்டி விட்டது. திக்கெட்டும் பரவியது புரட்சிக்கனல் திசையெங்கும் ஆர்த்தெழுந்தது தமிழர் கூட்டம். திடுக்கூற்றது இதைக்கண்ட தீக்ஷிதர் கூட்டம். பதைப் பதைத்து பார்ப்பனக்கும்பல் அஞ்சி நடுங்கியது அரசாங்கம் ஆரியர் கோள் மூட்டின. அரசாங்கம் அடக்குமுறை பாணத்தைத் தொடுத்தது திராவிடர் குருதி கொட்டினர். அக்குருதி வெள்ளத்திலே கொஞ்சி விளையாடியது கோலாகல தர்பார் ஆரியம். அதைக் கண்டு அகமகிழ்ந்தது.

குருதி வடித்த கூட்டம் அடக்குமுறைக்கஞ்சி ஓடி விடுமென்று நினைத்தது அரசாங்கம். ஆனால் தமிழர் கோழையல்லர் என்பதை நிரூபித்து திராவிடர் கூட்டம் கும்பல் கும்பலாகக் குவிந்தனர் அறப்போர் தொடுத்தனர். தடிகொண்டு தாக்கப்பட்டனர். இழி சொற்களுக்கு இலக்காயினர். ஆனால் மனந்தளரவில்லை இழிவு வரினும் இந்தியை எதிர்த்தே தீருவோம். தோல்வியே நேரிடினும் தோள் வலிமை காட்டுவோம். உயிரிழப்பினும் ஊதாரிக் கூட்டத்தை ஒடுக்கியே தீருவோம் இறந்துபடினும் இன்பத்திராவிட நாட்டை விடுவித்தே தீருவோம் என்று எக்காளமிட்டெழுந்த இளைஞர் கூட்டத்தைக் கண்டு தங்கள் தவறை யுணர்ந்து தலைகவிழ்த்தினர் தரணியாள்வோர் எனவே அவர்களும் திராவிடர்களாகையால், திராவிடக்கழகத்துடன் ஒத்துழைத்து இன்பத்திராவிட நாடு கண்டு களிப்பெய்துவாராக.

நான் விரும்பிய நங்கை

த. மதுரதாசன்

யா?

குச்சு வீட்டு குமரி!

மச்சுவீட்டு மகான் விரும்பியது !!

அவள் பெயர் தேவி. தகப்பன் மறைந்து பலகாலம் ஆகிவிட்டது. தாய் நிலத்திலுழைத்து ஊதியம் பெற்று அவளையும் அவளின் தம்பியையும் காப்பாற்றிக்கொண்டிருந்தாள்.

ஓர்நாள், குளக்கரைக்கு உலாவச் சென்றபோது, ஓர் கன்னி, நெற்றியில் சிவந்த திலகம் மின்ன, காற்றில் கருகிய கூந்தல் அலைய, கருகிய புருவங்களுடைய, மயக்கும் கண்கள் கீழ் நோக்க, இடையில் மண் குடம் இருக்க அசைந்தாடும் அன்னம்போல் வந்து கொண்டிருந்தாள் தேவி.

என் கண்களை, அந்த அழகிய ஓவியத்தில் பொருத்தினேன். ஓவியமும் ஒரு கணம் நிமிர்ந்து, அதன் கண்களும். என் கண்களை சந்தித்து. மறு கணம் மண்ணை நோக்கியது.

அந்த நோக்கில், உன் அன்பை ஒப்பினேன் என்றும், மண்ணை நோக்கியதில், எத்தனையோ காதலர்கள் கூடி, பல தடைகளால் களிப்படையாமல் மண்ணில் மறைந்தனர் என்றும் உறுத்தியது.

பூவையின் குறிப்பறிந்து புகலிடம் நோக்கிச் சென்றேன். பூவை ஏழைகள் ஏங்குமிடம், தாழ்ந்தவன் என்றால் ஏன்? என்றியம்பாதபடி எத்தர்களால் ஏமாளியாக்கப்பட்டோர் வாழுமிடம் உழைப்பை உரிமையாக்கிக் கொண்ட உத்தமர்கள் வாழுமிடம் அதில்குறுகிய வழியுடைய குச்சிக்கோபுரத்தினுள் சென்றாள்.

அன்றே பயந்தேன் சொல்லட்புகும் காதல் பாதையில சாதி ஏழை என்ற இரண்டு புரட்டமுடியா கற்களுள்ளன என்று பயத்தை அகற்றியது அந்த அழகிய அணங்கின் கண்கள்

மறுநாளிலிருந்து பலநாள் கடைக்கண் கருத்துபரிமாறல், பிறகு வார்த்தை பரிமாறல் அவளின் இன்மொழி இன்சொல்லாள் இல்லத்திற்கும் ஏக வைத்தது இல்லத்தில் அவளின் நற்குணங்கள் என் இதயத்தை இன்பத்திலாழ்த்தியது; மெய்யழகு என் கண்களை இன்பத்திலாழ்த்தியது; இன்சொல் என் செவிகளை இன்பத்திலாழ்த்தியது; சிவந்த இதழ் என் இதழை இன்பத்திலாழ்த்தியது: மெய்யின் மேல் வரும் மணம் என் நாசியை இன்பத்திலாழ்த்தியது; உடலின் மேன்மை என் உடலை இன்பத்திலாழ்த்தியது;

துன்பத்திலாழ்த்தியது சாதி என்ற சாத்திரம்; துன்பத்திலாழ்த்தியது ஏழை என்ற பொருளாதார பேதம்,

நாள்தோறும் சந்திப்பு, இன்மொழி பேசுதல். இல்லமேகுதல் அங்கு அவளின் வயது முதிர்ந்த' தாயிடம் வார்த்தையாடல், தம்பியுடன் விளையாடல், உணவருந்தி வெளியேறல். இவ்வாறு சிலநாட்கள் ஓடின.

ஊரிலோ, சாத்திரம் கெட்டு விட்டது என்று சங்கூதினர் சிலர். பறையன் வீட்டிற்கு பாவி போகிறானே என்று பறையொலித்தனர் சிலர். படித்தும் அப்பாவை நேசிக்கின்றானே என்று பண்பாடினர் சிலர்.

ஊரிலே, இதே பேச்சு, காட்டிக் காட்டி பேசினர்; என் செவியுணரும் படியும் பேசினர்; பயமுறுத்தியும் பேசினர்.

வீட்டிலே, அன்னையின் வன்சொல், தமக்கையின் உபதேசம், அத்தானின் அறிவுரை, நண்பனின் நற்புரை.

சிலநாட்கள் அங்கு செல்வதையும் நிறுத்தினேன். அதனால் எங்கள் அன்பு பயிர் அழிந்துவிடவில்லை. ஊரின் ஏசல் எருவாகவும் அன்னையின் வன்சொல் நீராகவும் கொண்டு செம்மையாக வளர்ந்தது,

பிறகு ஓர் நாள்காலை, பரீட்சைக்காக புத்தக ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தேன், ஏட்டில் நாட்டம் செல்லவில்லை. ஏன்? அவ்வேடுகளில் அவ்வழகியின் கண்கள் தெரிந்தன. புத்தகத்தை மூடினேன். ஓசை செய்யாமல் வெளியேறினேன்.

தேவியின் திருவிடம் வந்தேன் "தேவி" என்றேன்; அழுதாள்.

நான்:—ஏன் வகுந்து கின்றாய்? என்றேன்.

தேவி:—உன் அன்பின் சேர்க்கை என் அன்னையின் மானத்தைப் பதிந்தது' உன் சாதி அகம்பாவம், என் வாழ்க்கையை வளமற்ற தாக்கியது; உன் மாண்புள்ளகுடி என்னை மரண வாயலில் நிறுத்துகிறது; என்றுகலங்கியகண்களுடன் காரிகை கதறினாள்,

நான்:— 'தேவி சோக சிகரத்திலிருந்திருக்கின்றாய். அதனால் கோபம் அளவு மீறிவிட்டது. மாலை திரும்பவும் வருகிறேன் என்று சொல்லிவிட்டு வெளியேறினேன்.

பரீட்சைக்குச் சென்றேன்; எழுதினேன்; வீட்டிற்கு மாலை வந்தேன்; வீட்டுக் காரியங்களை முடித்துக்கொண்டு, அணங்கின் வீடு சென்றேன்.

கதவுமூடப்பட்டிருந்தது. நிசப்தம் நிலவியது; குயில் கூவிய இடம் குகைப்போல் காணப்பட்டது; மயிலாடிய இடம் மங்கிக்கிடந்தது; வண்ண புறா கொஞ்சிய இடம் வளமிழந்திருந்தது;

திகைத்தேன்; கற்சிலைப்போல் நின்றேன். சிறிது நேரம், அன்பென்னும் திரையில் காதலென்னும் ஓவியம் தீட்டினேன். அது சமூகமென்னும் கத்தியால. சாதிவெறி என்ற கூறிய முனையில் கிழிக்கப்பட்டது,

(5-ம் பக்கம் பார்க்கவும்)

மறைந்த மாவீரர் சிந்திய இரத்தம்

[நாகை இரா. மணாளன்]

சிந்தினர் இரத்தத்தை - மதத்தால் மறைந்தார். மனிதகுலமணி மகாத்மா - மாவீரர்.

மதத்தால் மரணமெய்தினர் மகாத்மா - ஏன்? ஐயோ! சத்தியமும் - தர்மமுமே உண்மை மதம் என்றார் உத்தமர்; யார் ஏற்றுக் கொண்டார்? உண்மைக்கு உயர்ந்த மதம் ஒன்றேனுமில்லை என்பார். யார் இதைஒத்துக்கொண்டார்கள்?

மரணபயமற்றவர், கொள்கைக்காகத் தனதின்னுயிரைத் திரணமெனக் கருதி மனித வாழ்வின் உயர்வை நாடித் தொண்டாற்றும் பரம தியாகி. அச்சமென்னும் கொச்சை வார்த்தையைத் துச்சமெனக் கருதும் தூயர். தான் செய்யும் செய்கை ஒவ்வொன்றிலும் தனக்கன்றி மனித சமூகத்துக்கு லாபமெனக் கருதும் பொது நோக்கு - நமது லக்ஷியத்தைக் கருதும் பொழுது நமக்கேற்பட்டதாகக் கருதப்படும் இன்னல்களும், இழிச் சொற்களும் ஒரு பொருட்டல்ல, நாம் செய்ய வேண்டுவதெல்லாம் நமது பாதையை ஒழுங்கு பெற வரையறுத்துக் கட்டுப்பாடாக உழைத்தலேயாம் என்ற பெறு நோக்கு கொண்டனர் கொல்லப்பட்டார்.

ஓ! மானிலத்தீர்! மதம் உண்டாக்கியது மனிதன், மனிதனுடைய சொல்லின் திறமையால் உண்டானவைகளே வொழிய - கண்ணால் பார்த்த பொருளல்ல: தன் அனுபவத்திலும் வந்தவைகளல்ல. பேசும் சக்திக்குப்பின் எழு நம் ஆற்றலும் வந்திராவிட்டால் இந்த சொற்கள் உலகில் தோன்றியே இருக்கா.

மதவார்த்தையில் சந்தேகம் கொள்வதுகூட மகா பாவமென்று பலர் நம்புகிறார்கள். அதில் சொன்னபடி நடவாவிடில். நரகம் கிடைக்குமென்று பாமர மக்களை வெகுகாலமாக ஏமாற்றி வருவதினால் அதை கூறிவரும் புரோகிதர்களின் வார்த்தைகளை தெய்வ மொழியாகப் பாமர மக்கள் மதித்து வந்தார்கள்- ஏன்? மதித்தும் வருகிறார்கள்.

இன்றைக்கும் உலகில் யூதர்களும், கிருஸ்துவர்களும் இஸ்லாமியர்களும், பார்சிகளும், ஹிந்துக்களும். பௌத்தர்களும் இன்னும் பிற மதத்தினர்களும் மக்களி ம் மத நம்பிக்கை பரப்பி வருகிறார்கள்.

பல்லாயிர ஆண்டுகளுக்குமுன் கிரேக்க நாட்டில் மதத்தை நம்பாமல் எதிர்த்து வந்தார் உடயகோரஸ், "மதத்தை மக்களே! நம்பாதீர்கள்" என்று கூறினார். சில நூறாண்டுக்கு முன்னர் ஏசுநாதர் மக்களுக்கு நல்வழி கூறியதால் சிலுவையில் சிந்தினர் இரத்தம்—

அதன்பின் உலகில் கிருஸ்து மதம் பரவலாயிற்று. அன்று முதல் மக்களிடையே மதமும் அரசும்இரண்டறகலந்து வளரவே

இந்தியாவில் ஹர்ஷன் காலத்திலும், சிவாஜி காலத்திலும் இந்து மதம் தழைத்தது - அவுரங்கசீப், திப்புசுல்தான் காலத்தில் துருக்கர் மதம் ஓங்கிற்று - அசோகன், கனிஷ்கன் ஆட்சியின் அரசில் பௌத்த மதம் சிறந்தது - சேர, சோழ, பாண்டியர் நாளையில் சமணம், சைவம், பௌத்தம், வைஷ்ணவம் அனைத்தும் அவரவர் அரசர் எவ்வழியோ அவ்வழியே மதம் பரவலாயிற்று-

சிந்தித்தார் சித்தாதர் சித்தாந்தத்தை ஒத்துக்கொண்டு வேத வைதீகத்தை வெறுத்தார், "ஆசையை அகற்று, தனிவுடமையை போக்கு" என்றாரே ஹிந்துவைஷ்ணவர் விஷ்ணுவின் அவதாரமென்று கூறியதே, இறுதியில் நாட்டின் நலனுக்காக சிந்திய இரத்தம் எவ்வளவு! பலனென்ன? சிந்தித்தீர்களா? மதவாதிகளே.

உலகிலேயே அரசியல் அதிகாரத்தின் மூல்யமாகத்தான் எந்த கொள்கையும் சமூகரீதியாகப் பரவ இயலுமென்பதற்கு எடுத்துக் காட்டாக.

1. ஹிட்லர் ஆட்சியில் நாதீயமும்.
2. முஸோலினி ஆட்சியில் தேசியமும்.
3. ஸ்டாலின ஆட்சியில் நாஸ்தீகமும்.
4. கமால் பாக்ஷா ஆட்சியில் சமூகப்புரட்சியும்

பாவியது எதைக் காட்டுகிறது என்று நீங்களே அறிந்துக்கொள்ளுங்கள்.

இதிலிருந்து மக்கட் சமூக வாழ்க்கையில் சமத்துவம் ஏற்படாமலிருந்தால் அரசியல், பொருளாதார சமத்துவம் கிடைப்பது அறிது. அப்படிக் கிடைத்தாலும் உண்மை சமத்துவமில்லை யென்பது மேற் குறிப்பிட்டுள்ளவைகளே எடுத்துக் காட்டுகளாகும்.

நம் நாட்டில் இருநூறு ஆண்டுகளாக அந்நிய மதங்களும் அரசுகளுமிருந்ததை அகற்ற எத்தனித்தோம். நினைத்த நேரத்திலேயே. போர்! போர்!! போர்!!! நடந்தது. நடந்துவருகிறது, இந்த போர்களுக்கு யார் குற்றவாளி, மதவாதி, புரோகிதர், வைதீகர்கள், சுயநல அரசியல்வாதிகள். இதுவரை நடந்துவந்த போர், எதன் பொருட்டு நடந்துவந்தன? நாம் அடைந்த பயன்தான் என்ன? நம் அறிவும், ஆண்மையும் எதற்கு பயன்படுத்தி யிருக்கிறோம்?

பெற்ற தாய், பிறந்த ஊர், வாழ்ந்த நன்னாடு இவற்றினிடையே பாசம் ஏற்படுதல் இயற்கை. இதனால்தான் தேசாபிமான போர்வையால் கொடுமைகளுக்கு ஆளானோம். தேசாபிமானம் கொண்டதால் ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தை ஆக்ரமிக்கும் நேரத்திலே யுத்தம் நடத்தினோம். யுத்தத்தில் காதலரை இழந்த கன்னியர் எத்தனையோ, மைந்தரை இழந்த விருத்தர் எத்தனையோ? தந்தை, தாய்களை இழந்த பச்சிளங் குழந்தைகள் எத்தனையோ? அங்கயீனர்களாய் வெட்டுண்ட ஏழை தொழிலாளர்கள் எத்தனையோ? அவர்கள் நிலை நினைக்குந்தோறும் குலை நடுங்குகிறதே:!—அதிலும் மதம் விட்டு மதம் மாறியவர்கள் எத்தனையோ? கலங்குகிறோம், கண்ணீர் சொறிகிறோம்.

மதக்குருக்களே! அறிவே ஆண்டவன், எல்லோரிடத்திலும் அன்பாய் நட, மண், பொன், பெண் ஆசைகளை அகற்று என்று இடித்திடித்துப் போதித்தன, எம் மதங்கள் சகோதரத்துவத்தையும், அன்பையும் பரவ பாடுபட்டதோ அம் மதவாத பக்தர்களே மனிதனை மனிதன் பிடுங்கியும், மதத்தின் பேரால் மதத்தை பரப்ப ஏற்பட்ட யுத்தங்கள் எத்தனையோ! இதனால் நாட்டில் மனிதசமூகம் முன்னேற்றமடைந்ததா? சோற்றுக் கவலை மக்களை வாட்டவில்லையா? பசிக் கொடுமை தாங்காது மானமிழந்து கையேந்தி, வாய்திறந்துக் கெஞ்சுவோர் எத்தனை? பயனின்றி வாடி மடியும் கோரக் காட்சிகள் எத்தனை? மற்றொருபுறம் கட்டக் கந்தையற்ற கோமணாண்டிகள் பல ஆயிரம்பேரும், மானத்தைக் காக்கவும் போதாத கந்தை யுடுத்திய கோடிக்கணக்கான பெண்களும் காட்சியளிக்கிறார்களே? மதம் சாதித்ததென்ன?

பலமக்கள் பொதுவாக பொந்துகளிலும், மரத்தின் நிழலிலும் தங்க, தங்களுக்கென்று சிறு இடமும் இல்லாத பஞ்சை மகளிர் எத்தனையோ?

பாழாப்போன மத தரகர்களே ஒரு கன்னத்தில் அடித்தால்...... உன் சொக்காயைக் கேட்டால்...... உபதேசத்தை உலகமெங்கும் பரப்பிய கிருஸ்தவ நாட்டவர் ஏசு பக்தர்கள், உலகயுத்தத்திலும், இந்தியாவிலும் நடந்துக்கொண்டது தானும், தனதுமே முக்கியம், பிறர் எக்கேடு கெட்டாலும் தன் இனமும், தன் நாடும் சுகமே பிறர் உழைப்பிலும் பொருளிலுமாகிலும் சுகமே வாழ்ந்தாற் போதும் என்கிற தன்னலமிக்கலால் நாசவேலைகள் ஏற்படவில்லையா?

வேதாந்தத்தை வெறுத்து சித்தாந்தத்தையே நம்பி ஆசையே உலக துன்பங்களுக்கும், யுத்தங்களுக்கும் காரணமென்று சித்தாத்தர் கூறியவைகளெல்லாம் என்ன வாயிற்று?

ஓ! மதக்குருக்களே! புரோகிதர்களே! பக்தர்களே! இதற்குத்தானா சிலுவையில் ஏசுநாதர் சிந்தினர் இரத்தம்? இதற்குத்தானா அரசபோகத்திலிருந்து வெளியேறினார் புத்தர்? இவைகளெல்லாம் உண்மை பக்தர்களே உதாசணம் செய்கிறார்களென்றால் இதன் உண்மைதானென்ன என்ற காரணம் உணர்ந்தோமா?

சிலமதங்கள் அவைகளின் தரகர்களின் பெயருக்கும், சுகவாழ்வுக்காக வாழ்கிற புரோகிதர்களே, மதகுருக்களே, மத உபதேசங்கள் அனைத்தும் பயன்படுத்தி மனித சமுதாயசமத்துவ ஒழுக்கத்துக்கும், ஒற்றுமைக்கும் பிணக்குழி பறிக்கிறார்களென தெரியவில்லையா?

இவைகளைத்தான் எடுத்துக் கூறியும், நாட்டின் மக்களுக்கு நல்லதோர் வாழ்வும், வகுப்புச் சண்டை, மதச்சண்டையின்றி, யுத்தமின்றி, சத்தியமும், தர்மமும் நேர்மையான வழி இதுவே மனித சமுதாயத்தின் ஒற்றுமையும், ஒழுக்கமும் என்று அஹிம்சையைப் பரப்பி நாட்டு விடுதலைக்காக அரும்பாடுபட்ட மாவீரர்மகாத்மா சிந்தினர் இரத்தம்—இறந்தார் - இல்லை! மறைந்தார் நம்மைவிட்டு, மதம் மறையச் செய்தது!

ஆண்டு ஒன்றாகிவிட்டது. இனியாவது பூர்ண சுதந்தரம் கிடைக்க, வேலை செய்ய சக்தியிருந்தும் வேலை அகப்படவில்லையே என்ற மனிதனுக்கு சுதந்திரம் கிடைக்க, பசியால் வருந்துகிற பசி! பசி!! என்ற கூக்குரல் போடுகிற மனிதனுக்கு சுதந்திரம் கிடைக்க, சிலரால் பலர் கொடுமைக்காளாகி வருகிறார்களே அந்த பலருக்கு பூர்ண சுதந்திரம் கிடைக்க.

அறியாமை, இல்லாமை, போதாமை, நீங்க சுதந்தரம்—ஒவ்வொருவருக்கும் தேர்தல் உரிமை வேண்டும் சொத்துடையவனென்ற வித்தியாசம், சாதி வித்தியாசம், இன வித்தியாசம், வகுப்பு வித்தியாசம், இவைகளால் சலுகை இருக்கக் கூடாது. ஆண், பெண், இருபாலருக்கும் தேர்தலுக்கு வாக்குரிமை உண்டானால் அதுவே பூர்ண சுதந்திரம்.

சத்தியத்தை விட்டு கொடுத்து கொள்கையை விற்று, பெயரையும் பட்டத்தையும், புகழையும் காப்பாற்றுவதிலேயே கண்ணோட்டமாயுள்ள மதமே மகாத்மாவை மத வெறியால் மறைய வைத்தது.

அத்தகைய கொடிய மதத்தை என் செய்ய விரும்புகிறீர்களோ - ? பார்ப்போம்! இவ்வாண்டிலாவது.

1-ம் பக்கம் தொடர்ச்சி

லாழ்ந்து கிடக்கிறேன். என் வாழ்வு சோபிதமற்றுக்கிடக்கிறது எனது நெஞ்சம் சொல்லொணாத வேதனையில் மூழ்கிக்கிடக்கிறது என்று சொல்லமாட்டார்கள், எப்படி சொல்வார்கள்? எல்லாம் அவன் செயல், தலைவிதி, கிரகாச்சாரம் முன்செய்த தீவினை, என்கிற சேறு நிறைந்த குட்டையிலே அவர்கள் உள்ளம் அழுந்திக்கிடக்கிறபோது.

(எப்படிப் பாடினாரோ என்ற இசை)

எடுப்பு

எப்படித் தாழ்ந்தனையோ தமிழா
செப்பரும் உன்றனின் சிறப்பை
யிழந்து நீ [எ]

உடன் எடுப்பு

ஒப்பில்லாமல் வாழ்ந்தார் உனது
முன்னோர்கள்
உயர்வு தாழ்வு இன்றி உலகினை
யாண்டார் [எ]

முடிப்பு

அலைகடல் மீதினில் மரக்கலம்
செலுத்தினர்
அயல் நாடெலாம் சென்று தமிழ்க்
கொடி நாட்டினர்
மறக்குடி மரபினில் பிறந்திட்ட
தமிழா
மதம் புகன்ற ஆரிய வஞ்சகர்க்கு நீ
[எ]

தொடர் கதை

லக்ஷம் ரூபாய் நக்ஷத்திரம்

: (x) :

[முன்வாரத் தொடர்ச்சி]

[" பிவியார் "]

இரவு வந்தது. முதலாளி கோலாகல கோலத்துடன் தங்கம்மாளின் அறையை நெருங்கினான். எதிர்பார்த்ததற்கு மாறாக கதவு தாளிடப் படாமல் இருந்தது. அவன் ஆத்திரமும் கோபமும் ஒருபடி இறங்கிற்று. தாளிடப் பட்டிருந்திருந்தால், அப்போதிருந்த ஆத்திரத்தாலும் கதவை எட்டியுதைத்து உடைத்துத் தள்ளியிருப்பான். கதவு திறந்ததும் உள்ளே பார்வையைச் செலுத்தினான் வெள்ளை மின்சார பல்புகள் நீக்கப்பட்டு பலவித கலர் பல்புக்கள் எரிந்து கொண்டிருந்தன, மங்கலாக. மலர் வாசமும் பன்னீர் அத்தர் வாசனைகளும் அவனுக்கு வரவேற்பு கூறுவது போல வீசின. படுக்கையின் பக்கம் அவனுடைய பார்வை பாய்ந்தது. சிங்காரமாகச் சயனித்துக் கொண்டிருந்தாள் தங்கம் புது மணப் பெண்களின் நிலைமையில், கன்னவுரக்கம் காட்டி. அண்டையிலிருந்த மேஜையின் மீது பாலும் பலகாரங்களும் பழங்களும் சந்தனம், மலர் பன்னீர் அத்தர், வகைகளும் இருந்தன. தங்கம்மாளை அப்படியே பழம் போல் எடுத்துச் சுவைக்க அவன் மனமும் கைகளும் பதறின. சில வாரங்கள் கடந்தன. எச்சுக் குட்டியின் எக்ஸ்டரா நடிகையின் குட்டு வெளிப்படலாயிற்று. நோய்கண்டு விட்டது அவளுக்கு. நோய் நிலையிலே தன் உண்மை நண்பரிடம், தங்கம்மாளுடன் நடந்த இரகசிய ஒப்பந்தத்தைச் சொல்லி விட்டாள். அந்த இரகசியம் அங்குள்ள சிப்பந்திகள் எல்லாரிடையேயும் காதுக்குக் காது வாயிக்கு வாயாக இரகசியமாகப் பரவி விட்டது. அதன் பிறகு முதலாளிக்கும் டைரெக்டருக்கும் தெரியாமலா போகும்? மீண்டும் முதலாளி டைரெக்டரின் பழி வாங்கும் இரகசிய மந்திராலோசனையும் அவதாரம் சி. ஐ. டி. வேலைகளும் நடந்தன. புது தந்திரமும் கண்டு பிடித்தனர். நடிகர் இருவரும் புது ஆபத்திலிருந்து தப்ப. இரவு வந்தது. எல்லோரும் கண்ணயர்ந்தனர். தங்கம் படுக்கையிலிருந்து எழுந்தாள். முன் கதவைப் பூட்டிக் கொண்டு பின் கதவின் வழியாக உள்ளே நுழைந்து குளிப்பறையில் பதுங்கிக் கொண்டாள் எதிர் பார்த்தது போன்றே முதலாளி வந்து கதவு பூட்டப்பட்டிருந்தது கண்டு முதலில் மயந்து நின்றார்- இதுவும் தந்திர ஏமாற்றாக இருக்கலாம் என்று கருதி தன்னிடமிருந்த சாவியால் பூட்டைத் திறந்து உள்ளே பார்த்தார். படுக்கையில் யாரையும் காணோம். டைரக்டரின் கைத்துணியும் சிகரட் பெட்டியும் மாத்திரம் படுக்கையில் கிடந்தன. திடுக்குற்றார். அந்தத் தடியன் தன்னை ஏமாற்றி விட்டானே என்று ஆத்திரம் பொங்கிற்று; முதலாளி டைரக்டரின் அறையை நோக்கிச் சென்றான். இரகசியக் கதவு வழியாக உள்ளே சென்று பார்த்தார். டைரக்டரையும் காணோம் தங்கம்மாளையும் காணோம். மிஸ் அவதாரம் டைரக்டரை மயக்கி வெளியில் அழைத்துச்சென்றஇரகசியம்அவருக்கு எப்படித் தெரியும்? ஆத்திரத்தோடு டைரக்டரின் படுக்கையை எட்டி உதைத்துவிட்டு முத்தண்ணா அந்த அறையைவிட்டு வெளியேறினார். முதலாளி தன் படுக்கையறையில் நுழைந்த போது யாரோ தன் படுக்கையில் படுத்திருப்பது கண்டார். கூர்ந்து கவனித்தார். மிஸ் அவதாரம் முதலாளி படுத்தவுடன் டைரக்டரும் தங்கம்மாள் அறைக்குச் சென்றார். தங்கம் இல்லை, முதலாளி வந்துபோனதற்கு அடையாளங்கள் இருந்தன. சரி முதலாளி தான் தங்கத்தை அடித்துக் கொண்டு போய் விட்டதாக எண்ணி, ஆத்திரம் கொண்டான். படப்பிடிப்பில் தன் கைவரிசையைக் காட்டத் தீர்மானித்தான், முதலாளியின் அறைக்குள் இரகசியமாக நுழைந்து பார்த்தான் மங்கிய வெளிச்சத்திலே படுக்கையில் இருவுருவங்கள் தென்பட்டன. விரைந்துவெளியிலேறினான். மறுநாள் அதிகாலையில் வெளிக்காட்சி ஷூட்டிங்குகளுக்கு அவசர அவசரமான ஏற்பாடுகள் செய்யப் பட்டன. முதலாளியும் டைரக்டரும் சந்திக்கவில்லை. ஒவ்வொருவரும் தனித் தனியாக உத்திரவுகள் பிறப்பித்துக் கொண்டிருந்தனர். கடைசி நேரத்தில் மாத்திரம் ஒருவரிடமிருந்து ஒருவருக்கு ஷூட்டிங்பிரயாண அறிவுப்புக் கடிதங்கள் வந்தன. ஒருவரை ஒருவர் முந்திக் கொள்ள எண்ணினர். முதலாளி துரிதமாக உடுத்திக்கொண்டு தங்கம்மாளின் அறையைநோக்கி ஓடினார். தங்கம் உடுத்திக்கொண்டு தயாராக இருந்தாள். முதலாளி வாய் பேசாது தங்கத்தை ஜாடை காட்டி அழைத்துச்சென்று காரில் ஏறும்படி செய்தார். அந்தக் காரோ இருவர் பக்கத்தில் பக்கத்தில் நெருங்கி உட்காரும்படியான பேபிட்டு சீட்டர்கார், முதலாளிகாரை ஓட்டினார் தங்கம்மாள் பக்கத்தில் அமரவேண்டிய நிர்பந்த மேற்பட்டது. காரும் புறப்பட்டது. அதே சமயத்தில் டைரக்டர் ஆத்திரத்துடன் வெளியில் ஓடிவந்தார். முதலாளியின் துரோக நாடகக் காட்சியைக் கண்கொண்டு பார்த்தான். உள்ளம் பொங்கி வெம்பினான்.

ஸ்டுடியோ சிப்பந்திகளும் காமரா ஒலிப் பதிவு சாதனங்களும் தேவையான சாமான்களும் முன்னமே லாரிகளில் அனுப்பப்பட்டு விட்டன, நீலகிரி மலையை நோக்கி, டைரக்டரை வென்று விட்டோம் என்ற சந்தோஷத்தாலும் பெருமிதத்தாலும் முதலாளி மனத்தில் இன்பம் பொங்கியதுபோல் காரும் இன்ப வெள்ளத்தில் போவது போல் மலையின்மீது சென்றுகொண்டிருந்தது. முதலாளி கார் செலுத்துவதன்மீது கவனம் செலுத்தியதைவிட அதிக கவனம் தங்கம்மாளின்மீதே செலுத்தினார் தங்கம்மாளின் கோலத்தைக்காண முதலாளியின் கடைக்கண் பார்வை நொடிக்கொருதடவை பாய்ந்தது. கார் மலையின் நடு உயரத்திலிருக்கும் பாதையில் சென்றுகொண்டிருக்கிறது. ஆமாம் டைரக்டரின் கார்தான் முதலாளி காரை மேலும் விசையாகக்கிளப்பினார். காலைக்கதிரவனின் பொன்னிறக் கதிர்கள் பாய்ந்து குளிர் மரச்சோலைகள் இன்பத் தென்றலை வாரி வீசுகிறது. பறவையினங்கள் இணையிணையாகத் துள்ளி விளையாடுகின்றன. இரவிக் குளிரால் சடவுற்றிருந்த அவயவங்களுக்கு உணர்ச்சி அளிக்க முற்பட்டவை போன்று பறவையினங்களின் சிங்கார விளையாட்டுக்காலம் காலைதானே. முதலாளியின் கண்கள் இந்த காட்சிகளைக் காணாமலிருக்க முடியுமா? கண்டான் அண்மையில் அமர்ந்திருக்கும் தங்கத் திருமேனியையும் தரிசித்தான். மாறி மாறிப் பாய்ந்தது அவனுடைய பார்வை விளையாடும் பறவைள்க மீதும் தங்கம்மாளின் மீதும். உணர்ச்சி வேகம் அவர் செலுத்தும் மோட்டாரின் வேகத்தைப் போன்றே நொடிக்கு நொடி அதிகறித்து உணர்வை மறைத்தது, சூழ்நிலைமையை மறைத்தது. மோகமேகம். காரின் சாரத்திய சக்கரத்திலிருந்த முதலாளியின் கைகள் சடக்கென எழுந்து தங்கம்மாளின் திருமேனியை ஆர்வத்தோடு தழுவின. ஆஹா வலிய அணைத்த சுகத்திற்கும் இணையுண்டோ.

முத்தண்ணா தங்கத்தை அணைந்த மறு நொடியிலேயே கார் உருளும் இரைச்சல், அலரல் குரல், தங்கம் முத்தண்ணாவும் காரின்மீது அமர்ந்திருந்தது போய் இப்போது உருண்டு கவிழ்ந்து கிடக்கும் காருக்கு அடியில் அகட்பட்டுக்கிடந்தனர் இரத்தக் கோலத்தில்.

* * *

ஜெனரல் ஆஸ்பத்திரி எக்ஸ்ரே அறையை நோக்கி ஒரு நோயாளியைச் சுமந்து கொண்டிருந்த ஒரு உருளை நாற்காலி தள்ளிக்கொண்டு போகப்பட்டது அந்த ஆண்நோயாளி எலும்புருக்கி நோயாலோ விஷக் காய்ச்சலாலோ பாதிக்கப்பட்டவன் போல் இளைத்து எலும்பும் தோலுமாக இருந்தான். தோலோடு கூடிய மண்டை ஓட்டுலிருந்த ஆழ்ந்த குழிகளுக்குள் பதுங்கியிருந்த இரு விழிகள்தான் அந்த ஆணுடலில் உயிர் இருப்பதற்கு அடையாளமாக ஒளி காட்டிக் கொண்டிருந்தன. அதே சமயத்தில் மற்றொரு பெண் உருவத்தைக் கொண்ட தள்ளுவண்டியும் எதிர் புறத்திலிருந்து அந்தஅறையை நோக்கிவந்தது. ஓர் பெண்ணுருவம், தலையிலும் உடலிலும் பலத்த கட்டுகளுடன் அமர்த்தப்பட்டிருந்தது. உணர்ச்சி தடுமாறிய நிலைமையில் அவன்கண்ணை மூடியபடி சாய்ந்து கொண்டிருந்தான். இரண்டு நாற்காலிகளும் அறையின் கதவுக்குப் பக்கத்தில் எதிரும் புதிருமாக நிறுத்தப்பட்டன.

கதவு திறக்கப்படாததால் கதவுக்குப் பக்கத்தில் தாமதிக்க வேண்டியதாயிற்று. தள்ளிக்கொண்டுவந்த ஆட்களும் சற்று ஓய்வுகொள்ள அங்கிருந்த நாற்காலிகளில் அமர்ந்து கதைகளைப் பேசிக்கொண்டிருந்தனர்.

நாற்காலி அசையாதது கண்டு அந்த ஆண்உருவம் தன்பார்வையைக் கூர்மையாகச் செலுத்தி சுற்றியும் பார்த்து நர்சுகள் எட்டஅமர்ந்திருப்பதையும் எதிரில் ஒரு நாற்காலியில் ஓர்பெண்ணுருவம் இருப்பதையும் பார்த்தான். தன்னைப்போன்ற மற்றொரு நோயாளியின் பேரில் எழும் இயற்கை அனுதாபத்தாலோ அல்லது மற்றொருநோயாளியுடன் தன்னை ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளும் ஆசையாலோ எதிரிலிருந்த பெண் நோயாளியை ஆண் நோயாளி சில நிமிஷங்கள் கூர்ந்து பார்த்தான். அவளுடைய ஒவ்வொரு அங்கங்களையும் கண்கொண்டு ஆராய்ந்தான். சில நிமிஷங்களுக்குள் அந்தஆணின் உணர் விழுந்த முகத்திலும் ஏனோ பயங்கரக்கோலம் பரவிற்று ஆழ்ந்த கண் விழிகளும் எட்டிப்பாய முன்னடைந்தன.

"தங்கம் என்ற அறைக் குரல் அந்த எலும்புக் கூட்டின் வாயிலிருந்து கிளம்பிற்று. ஆமாம் அடிபட்டுச் சாய்ந்து கிடப்பவள் தங்கம்மாளே முதலாளியின் அறிவுகெட்ட செயலால் காருடன் பள்ளத்தில் உருண்டு படுகாயமுற்று அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய தங்கம்மாள் தான். முத்தண்ணாவோ நெஞ்சுக்கூடு நொருங்கி உலக இன்பத்தைவிட்டு தங்கம்மாளுக்கு உள்காயங்களோ எலும்பு முறிவுகளோ ஏற்பட்டிருக்கின்றனவா என்று சோதித்துப் பார்க்கத்தான் எக்ஸ்ரே சோதனை அறைக்குக் கொண்டு வரப்பட்டாள்.

'தங்கம்" என்ற குரல் அவளுடைய யோக நிலைமையை மாயமாக்கிற்று. எப்போதோ எங்கோகேட்ட குரல். மறக்கமுடியாத குரல். திடுக்குற்றுத் தலையைத்தூக்கி எதிரிலிருந்த நோயாளியைக் கூர்ந்து பார்த்தாள், இரண்டொரு நிமிஷம் நர்சுகளோ இவ்விருவரின் செய்கைகளைப் பார்த்து தமாஷாகச் சிரித்துக் கொண்டிருந்தனர். தடுக்க அக்கரை காட்டவில்லை.

"என்சாமி" என்று அலறியபடி தங்கம் தானிருந்த நாற்காலியிலிருந்து, விசைப் பொம்மைபோல், எதிர் நாற்காலியை நோக்கிப் பாய்ந்தாள். பாய்ந்த வேகத்திலே எதிரிலிருந்த காமாட்சிநாதன் எலும்பு உடல்மீது தடாலென விழுந்தாள் இரண்டுடல்களும் ஒன்றையொன்று தழுவின. ஆசையும் காதலும் ஆர்வமும் புதுப்பொலிவுடன் விளங்கின அந்த இரு முகங்களில் உயிர் நீங்கிய பின்பு கூட............!

தொடரும்.

டெலிபோன்: 86729

நியூடன் அண்டு கம்பெனி,

80, வாலாஜா ரோடு, மௌன்ட் ரோடு,

சென்னை 2,

கண்ணுக்கினிய எங்கிரேவிங்குகளும், சகல வித ஆப்டோன் பிளாக்குகளும், லைன் பிளாக்குகளும் ட்ரை கலர் பிளாக்குகளும், ரப்பர் ஸ்டாம்புகளும் செய்வதற்கான சிறந்த இடம். நம்பிக்கையும், புகழும் வாய்ந்த தக்க இடம்.

வெளியூர் ஆர்டர்களுக்கு பிரத்தியேக கவனிப்பு.

Edited and Published by B. Ranganatham. Mg. Ed. By R. Rajagopal. 33, Thiruvengada Mudali Street, Periamet, Madras 3. Printed by J. A. SILVIA at the "LIBERATOR" Press, 2-11, Mount Road, Madras 2.